

# திறவுகோல்

2050 வைகாசி
மாத இதழ்

செண்பக வனம்

உள்ளாட்சி என்னும் உயிர்நாடி

புர்ஜ் கலிஃபா

வரலாற்றின் சுவடுகளில் மன்னார்குடி (பகுதி 4)

என் மகள் (கதை)

வெளியீடு
மன்னையின் மைந்தர்கள் அமைப்பு

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் குழு ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

*மண்ணின் மாற்றத்தை நோக்கி*

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு, இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. தற்பொழுது அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படை வசதிகளை சரி செய்து கொண்டு வருகிறார்கள்.

நோக்கம்

மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

# ஒளிரும் ஆசிரியர் (பகுதி 1)

## மாணவர்களுக்காக மெழுகாய் உருகிடும் ஆசிரியை மாலா!



நம் மன்னார்குடி பகுதிகளில் தன்னார்வம் மற்றும் தொண்டுள்ளத்துடன் பணிபுரிந்து வந்து தம்மைப் பற்றி வெளியுலகிற்கு அதிகம் விளம்பரப்படுத்திக் கொள்வதைத் தவிர்த்து ஆழ்ந்த அமைதியோடு ஓயாத உழைப்பை மேற்கொண்டு வரும் ஆசிரியப் பெருமக்களின் தனித்த அடையாளங்களைத் திறவுகோல் மூலமாக அனைவருக்கும் தெரியப்படுத்த விழைவதே இத்தொடரின் தலையாய நோக்கமாகும்.



அந்த வகையில் இப்போது நாம் அறியவிருக்கும் ஒளிரும் ஆசிரியை திருமதி மாலா ஆவார். இவர் தற்போது தலைமை ஆசிரியையாகப் பணியாற்றி வரும் பள்ளியானது நம் திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் ஒன்றியத்தில் கோரையாற்றின் கரையில் அமைந்துள்ள சித்தாம்பூர் ஸ்ரீராமகிருஷ்ணா உதவிபெறும் தொடக்கப் பள்ளி ஆகும். சற்றேறக்குறைய இருபத்தைந்து ஆண்டு காலமாக இப்பள்ளியில் பள்ளி, மாணவர் மற்றும் சமுதாய வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் பள்ளி நிர்வாகி திருமிகு நா.மதிவாணன் அவர்களுக்கு உற்ற துணையாக இருந்தும் தம் சொந்தப் பணத்தைப் பல்வேறு அடிப்படை வசதிகளுக்குத் தன்னலம் பாராமல் செய்து வருவது வியப்பானது.

குறிப்பாக, கடந்த 2012 ஆம் ஆண்டில் ரூபாய் ஒரு இலட்சம் மதிப்பிலான ஆழ்குழாய் கிணற்றுடன்கூடிய குடிநீர் வசதி ஏற்படுத்தித் தந்ததும் பிற்காலத்தில் ரூபாய் இருபதாயிரம் நிதியுதவியுடன் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் இயந்திரம் நிறுவியதும் அனைவராலும் பாராட்டப்பட்ட நிகழ்வுகளாவன. ஏனெனில், அரசின் நிதியுதவி அரசுப் பள்ளிகளுக்கு மட்டுமே! அரசு உதவிபெறும் பள்ளிகளுக்கு அல்ல. தம் சொந்த பொறுப்பில்தான் நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்கிற அவலநிலை.



அதுபோல் தம் உறவினர்கள் மூலமாகத் திரட்டப்பட்ட ரூபாய் ஐம்பத்தைந்தாயிரம் நிதியுதவியைக் கொண்டு

இரும்புக் கம்பி வேலி அமைத்துப் பள்ளிப் பாதுகாப்பை உறுதி செய்ததும் கஜா கோரப்புயலில் வீழ்ந்த மரங்களை வீணாக்காமல் மேலும் மரங்கள் வாங்கி பள்ளித் தளவாடப் பொருள்களான மேசை, நாற்காலி, இருக்கைகள் என ரூபாய் ஐம்பதாயிரம் மதிப்பில் உணர்வுப்பூர்வமாகச் சொந்தமாகச் செலவழித்து உருவாக்கி வருவது குறிப்பிடத்தக்கது. ஆண்டுதோறும் தம் அன்புக்கணவரின் பிறந்த நாளில் மாணவர்களுக்குப் பல்வேறு போட்டிகள் நடத்தி பரிசு வழங்குவதை வாடிக்கையாகக் கொண்டுள்ளார்.



கற்பித்தலில் தொடர்ந்து புதுமைகளையும் இனிமைகளையும் புகுத்திக் கற்றலை நிலைப்படுத்தி வருவது இவரது தனித்திறனாகும்.



குழந்தை மையக் கற்றல் முறைக்கு அடிப்படையாக விளங்கும் விளையாட்டு மற்றும் செய்து கற்றல் முறைகள் மூலமாகவே இவரது கற்பித்தல் பணி அமைந்துள்ளது. தொடக்க நிலையிலேயே நல்ல குடிமைப்பண்புப் பயிற்சியைக் குழந்தைகள் பெற்றிடவும் எதிர்காலத்தில் நல்ல குடிமக்களாக உருவாகிடவும் மாதிரி தேர்தல் மற்றும் மாணவர் பாராளுமன்றம் நிறுவும் நடவடிக்கையினை இதற்கு சான்றாகக் கொள்ளலாம்.



ஆங்கில வாசிப்பை மேம்படுத்த சரியான ஒலிக்குறிப்பு அட்டை பயிற்சி, கணித அறிவை வளர்த்துக்கொள்ள தம் மகனது அபாகஸ் மற்றும் பயிற்சித் தாள்களைக் கொண்டு பயிற்சி, விதை முளைத்தல் உள்ளிட்ட எளிய சோதனைகள் மூலம் அறிவியல் மனப்பான்மைக்கான பயிற்சி, அஞ்சலகம், வங்கி உள்ளிட்ட இடங்களில் வழங்கப்படும் படிவங்களைப் பூர்த்தி செய்ய பயிற்சி, தன்சுத்தம் பேணும் கைகழுவுதல் பயிற்சி, தமிழ் வாசிப்பை அதிகரிக்க சொல்வதெழுதுதல் மற்றும் வாக்கியம் அமைத்தல் பயிற்சி முதலானவை வாயிலாக நல்ல தரமான மாணவர்களை உருவாக்கும் பெருமுயற்சியில் இவரது பங்கு அளப்பரியது.

தற்போது நவீனப்படுத்தப்பட்டுள்ள பாடப்புத்தகத்தில் அமைந்துள்ள விரைவுக் குறியீட்டு முறை கற்றலை வலுப்படுத்தும் பொருட்டு இணைய வசதியுடன் கூடிய மடிக்கணினி மற்றும் கம்பியில்லா ஒலிப்பெருக்கி வாயிலாகக் கற்றலில் நவீனத் தொழில்நுட்ப பயன்பாடுகளை அதிகரித்து, தம்மையும் அதற்கேற்ப தகவமைத்துக்

கொள்ள முயன்று வருவது போற்றத்தக்க ஒன்றாகும். தற்போது சார்லட் தொண்டு நிறுவனம் ஒன்றின் உதவியுடன் வகுப்பறையை மெய்நிகர் வகுப்பாக உருவாக்கிடும் வகையில் திறன்மிகு தொலைக்காட்சிக் கருவி மற்றும் தொடர் மின் தேவைக்குதவும் மின்சேமிப்புக் கலன் ஆகியவற்றை பள்ளி நிர்வாகியுடன் இணைந்து குக்கிராம பள்ளி மாணவர்களின் கற்றலுக்குத் தகவல் தொழில்நுட்ப வசதிகளைப் பெற்றுள்ளது இவரது அண்மைச் சாதனையாகும்.



இது தவிர, மாணவர்களின் பன்முகத் திறன்களை வளர்க்கும் பொருட்டு சுற்றுச்சூழல் நாடகங்கள், வில்லுப்பாட்டு, நெகிழி ஒழிப்பு விழிப்புணர்வு தெருக்கூத்து, சேமிக்கப் பழகுவோம் ஓரங்க நாடகம், தேசிய அறிவியல் நாள் உள்ளிட்ட தேசிய விழாக்கள் மற்றும் ஆண்டு விழாக்கள் நடத்துவது இவரின் தொடர் நிகழ்வுகளாவன எனலாம். இதுபோன்று இவ்வாசிரியையின் சீர்மிகு பணிகளை அடுக்கிக்கொண்டே இருக்க முடியும். ஏழை, எளிய மாணவர்களின் இருண்டுக் கிடக்கும் வாழ்க்கையில் வெளிச்சத்தை அனைத்து வகையிலும் பாய்ச்சி வளப்படுத்துவதை ஒற்றை குறிக்கோளாக எண்ணி மெழுகாய் உருகும் இந்த மாலா தலைமை ஆசிரியை மனித சமூகத்தின் ஒளிரும் ஆசிரியை தானே?!

தொடர்வார்கள்...

**-முனைவர் மணி.கணேசன்**

# வரலாற்றின் சுவடுகளில் மன்னார்குடி (பகுதி 4)

## 13ம் நூற்றாண்டில் அநியாய வரி விதிப்பும், மன்னை மக்களின் போராட்டமும்

பிற்கால சோழர் ஆட்சியின் கடைசி காலக்கட்டமான 13ம் நூற்றாண்டில் சோழர் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகள் எங்கும் வரிவிதிப்பு முறைகளில் முறைகேடுகளும், அநியாயங்களும் நடைபெற்றன. சோழர் ஆட்சியினை, பாண்டியர்கள் முடிவுக்கு கொண்டு வர போராடிக் கொண்டிருந்த காலம் அது. சோழர்கள் வலுவிழந்து கொண்டிருந்தனர். அக்காலகட்டத்தில், ஆங்காங்கே சிற்றரசர்களும், ஊர்த்தலைவர்களும், அதிகாரிகளும், மன்னர் விதித்த நியாயமான வரி முறையினை மாற்றி, தாங்களாகவே சுயேச்சையான அதிகாரத்தோடு அதிகமான வரிகளை மக்கள் மீது சுமத்தி இலாபம் ஈட்டினர். மக்கள் அநியாயமான வரி விதிப்பினால் அல்லலுற்றனர். இந்த வரி விதிப்பு முறைகளும், அவற்றால் மக்கள் பட்ட துயரங்களும் வரலாற்றின் சுவடுகளில் மிக அரிதாகவே காணப்படுகின்றன.

அந்த அரிதான வரலாற்று ஆதாரங்களில் பெரும்பாலானவை, அதிகப்படியான வரி விதிப்பை குறித்தும், மக்களின் துயரங்களை பற்றியுமே குறிப்பிட்டு வர, நம் மன்னை ராஜகோபால சுவாமி மற்றும் கைலாசநாதர் கோவிலில் உள்ள கல்வெட்டுகள், வரி விதிப்பிற்கு எதிராக மன்னை மக்கள் நடத்திய போராட்டம் குறித்து குறிப்பிடுகிறது. அக்காலத்திலேயே மன்னை மக்கள் போராட்ட குணம் மிக்கவர்களாகவும், போராடி உரிமைகளை நிலைநாட்டும் நேர்மையாளர்களாகவும், எதற்கும், யாருக்கும் அஞ்சாதவர்களாகவும் இருந்தது அக்கல்வெட்டுகள் வாயிலாக அறிய முடிகிறது. அதுமட்டுமின்றி, கிராம சபைகள் மற்றும் நாட்டுச்சபைகள் எவ்வளவு அதிகாரம் மிக்கவையாக சோழர் காலத்தில் இருந்தன என்பதற்கும் நம் ஊர் கல்வெட்டுகள் சிறந்த ஆதாரமாக திகழ்கின்றன.

கி.பி. 1239ம் ஆண்டு. சோழர் ஆட்சியின் இறுதிக்கட்டம். வரிக்கொடுமையால் மிகுந்த துன்பத்திற்கு உள்ளான மன்னை மக்கள், இந்த வரிவிதிப்பு தொடர்ந்தால் தாங்கள் யாரும் தம் தம் ஊர்களில் இனி பயிர்த் தொழில் செய்ய மாட்டோம் எனவும், ஊரில் குடியிருக்கப் போவதில்லை எனவும், மன்னை கிராம சபையாரிடம் முறையிட்டனர். இக்காலத்தில் உழவுத் தொழிலுக்கு கிடைக்கும் மரியாதை என்னவென்று நாம் கண்கூடாக பார்த்து வேதனையுறுகிறோம். ஆனால் அக்காலத்தில் அப்படியல்ல. உழவுத் தொழில் தான் மக்களின் மூச்சாக இருந்ததுள்ளது.

ஆகவே, பயிர்த் தொழிலினை விட்டுவிட்டு மக்கள் செல்வதாக முறையிடவும், மன்னார்குடி கிராம சபையார், மன்னார்குடி சபையையும், பக்கத்திலுள்ள ஐந்து

நாடுகளின் (வளநாடுகள்) மகா சபையையும் கூட்டினர். இந்த பெரும் சபை கூட்டமானது, கயிலாயமுடையார் கோவிலில் நடந்தது (தற்போது புதுப்பாலம் பகுதியில் உள்ள கைலாசநாதர் கோவில்).

அந்த பெரும் சபைக் கூட்டத்தில், மக்களின் முறையீட்டின் மீதான விவாதங்களும் நடைபெற்றன. முடிவில், மன்னரால் ஏற்கனவே விதிக்கப்பட்டு நடைமுறையில் இருந்த நியாயமான வரிகளே இனி வசூலிக்கப்பட வேண்டும் என்றும், அதற்கு மேல் அதிகமாக கேட்கும் எதையும் மக்கள் கொடுக்க வேண்டியதில்லை என்றும், இதற்கு முரணாக நடப்பவர்கள் கிராமத் துரோகியும், நாட்டுத் துரோகியும் ஆவார்கள் என்றும், இதை வண்துவராபதி மன்னனார் கோவிலிலும் (தற்போதைய இராஜகோபால சுவாமி கோவில்), கயிலாயமுடையார் கோவிலிலும் கல்வெட்டுகளில் வெட்டிவிட வேண்டும் என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன்படி இத்தீர்மானமானது இராஜகோபால சுவாமி கோவிலிலும், கைலாசநாதர் கோவிலிலும் கி.பி.1239ம் ஆண்டு கல்வெட்டுகளில் வெட்டப்பட்டன. இது நடந்து ஐந்தாம் நாளில், மன்னைக்கு அண்மையில் உள்ள திருஞானசம்பந்த சதுர்வேதிமங்கலத்தில் (இவ்வூரின் தற்போதைய பெயர் எனக்கு தெரியவில்லை) அதே போன்றதொரு பேரவையினை கூட்டி, நம் ஊரில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் போன்றே, அங்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். அக்காலத்திலேயே மற்ற ஊர்களுக்கு முன்மாதிரியாக திகழ்ந்தது நம் மன்னார்குடி ஆகும்.

கி.பி.1239ம் ஆண்டிலேயே அநியாய வரி முறைக்கு எதிர்ப்பு தெரிவித்து, ஊர் சபை கூட்டி, தீர்மானம் நிறைவேற்றி, பக்கத்து ஊர்களுக்கு முன்மாதிரியாக திகழ்ந்து, அதை கல்வெட்டுகளிலும் வெட்டி ஆவணப்படுத்த தீர்மானம் நிறைவேறியவர்கள் நம் மன்னை மக்கள். சோழர் காலத்தில் மக்கள் ஊர்ச்சபையினை கூட்ட இருந்த உரிமையையும், கிராமச்சபை மற்றும் நாட்டுச்சபை ஆகியவற்றுக்கு இருந்த அதிகாரங்களையும் தமிழ் கூறும் நல்லுலகிற்கு எடுத்துக் கூறும் வரலாற்று பெட்டகமாக நம் ஊர் கல்வெட்டுகள் உள்ளன.

மன்னையின் வரலாறு தொடரும்...!

தகவல் உதவி :
பிற்கால சோழர் சரித்திரம் - T.V. சதாசிவ பண்டாரத்தார்.
South Indian Inscriptions & Volume 6 & Inscription nos. 50 58.
South Indian Inscriptions & Volume 4 & Inscription No. 48.

---



எழுத்தாக்கம் :
அபிராமி பாஸ்கரன்

# நீயும் நானும்

உன்னில் தோன்றும்
கனவாக நான்!

என்னில் உறைந்த
நினைவாக நீ!

நான் தேடிக் கண்டெடுத்த
மகாராஜாவாக நீ!

உன் இதய சிம்மாசனத்தில்
மகாராணியாக நான்!

நீ ருசிக்கும்
தேநீராக நான்!

இந்த ருசிக்கு ருசி சேர்க்கும்
சர்க்கரையாய் நீ!

நீ நனையும்
மழையாக நான்!

எனை நனைக்காமல் விரியும்
குடையாக நீ!

நான் கடிக்கும்
நகமாக நீ!

அதை இறுக்கி பிடிக்கும்
விரலாக நான்!

நான் சிந்தாத
கண்ணீராய் நீ!

உன் கண்ணீரை சிறை பிடிக்கும்
கண் இமையாய் நான்!

நான் படிக்கும்
புத்தகமாய் நீ!

அதில் நீ எழுதிய
புதுக்கவிதையாக நான்!

நான் ரசிக்கும்
பாடலாக நீ!

அதில் நீ மீட்டும்
இசையாக நான்!

கோவிலின்
கோபுரமாய் நீ!

உன் காத்திருப்பில்
தரிசனமாய் நான்!

என் காதலாக
நீ!

உன் காதலின்
காவியமாக நான்!

இப்பிரபஞ்சத்தில்
உண்மையும் உவமையுமாக
இப்படி பல கோணங்களில்
நீயும் நானும் ...

இணைந்தே பயணிப்போம்!..

- பொன்மணி தர்மராஜன், BE.,
பரவாக்கோட்டை.

# உள்ளாட்சி என்னும் உயிர்நாடி



செந்தில் பக்கிரிசாமி
மன்னை

நம் இந்திய ஒன்றியத்தின் நிர்வாகம் பல அடுக்குகளாக பிரிக்கப்பட்டு உள்ளது. அவைகள்,

1. மத்திய அரசு நிர்வாகம் (நாடாளுமன்றம்)
2. மாநில அரசு நிர்வாகம் (சட்டமன்றம்)
3. உள்ளாட்சி நிர்வாகம்

நம் நாட்டில் வசிக்கும் ஒவ்வொருவரின் தேவையும் பொதுவாக இந்த மூன்று நிர்வாகத்திற்குள் அடங்கி விடும்.

1. மத்திய அரசின் நிர்வாகம்

புகைவண்டித் துறை, அஞ்சல் துறை, வருமான வரித்துறை, தேசிய நெடுஞ்சாலைகள், எரிபொருள், பணம், தொலைப்பேசித்துறை, பேரிடர் மீட்பு,நிவாரணம், ராணுவம், கடற்படை, விமானப்படை, மாநிலங்களுக்கு இடையே உள்ள நீர்ப்பங்கீடு உள்ளிட்ட பிரச்னைகள், மருத்துவம், பொறியியல் உள்ளிட்ட உயர் கல்வி நுழைவுத்தேர்வுகள் மற்றும் நாடு முழுவதும் பொதுவாக அமைக்கப்படும் மருத்துவமனைகள் போன்றவை மத்திய அரசின் கீழ் வரும். (இன்னும் பல உண்டு). இது தவிர மாநில நிர்வாகம் மற்றும் அதன் உள்ளட்சி நிர்வாகத்திற்கும் ஒரு குறிப்பிட்ட அளவு நிதி ஒதுக்குவார்கள். அதற்காக ஒவ்வொரு மாநில அரசும் வருடா வருடம் ஒரு பெரிய தொகையை மத்திய அரசிற்கு வரியாக வழங்கும். தமிழ்நாடு 130000 கோடி வரை மத்திய அரசிற்கு வரி செலுத்துகிறது.

2. மாநில அரசு நிர்வாகம்

மாநிலத்தின் பெரும்பான்மையான துறைகள் இதில் அடங்கி விடும். போக்குவரத்து, கல்வி, மருத்துவம், நீர் மேலாண்மை, குப்பை மேலாண்மை, கழிவு நீர் மேலாண்மை, மின்சாரம், கனிம வளம், மது விற்பனை, ரேஷன், மாநில நெடுஞ்சாலைகள் என அனைத்தும் இதில் அடங்கி விடும்.

3. உள்ளாட்சி நிர்வாகம்

நமக்கான அன்றாட அடிப்படை வசதிகளை நிறைவு செய்வது தான் உள்ளாட்சி நிர்வாகம். இது மிக சிறப்பாக அமைந்து விட்டாலே நாட்டில் பாதி பிரச்சனை ஒழிந்து விடும்.

நம் வீட்டில் குடிநீர் இல்லாமல் இருத்தல், நம் தெருவின் சாலை, நம் ஊர் குளம் தூர்வாருதல் உள்ளிட்ட நீர் மேலாண்மை, நம் பகுதி குப்பைகள் மற்றும் திட,திரவக்கழிவு அகற்றுதல், நம் தெருவில் மின் விளக்குகள் நிலை உள்ளிட்ட மிக அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் உள்ளாட்சி நிர்வாகத்தில் தான் இருக்கும் .

தமிழ்நாடு இந்திய ஒன்றியத்திற்கு வருடா வருடம் 130000 கோடி ரூ வரை வரி செலுத்துகிறது. ஆனால் இந்த வரி என்பது நம் மாநில நலனுக்கான வரி மட்டும் அல்ல.

அது இந்திய ஒன்றியத்தின் நலனுக்கானது. அதாவது நம்மைப் போன்று ஒவ்வொரு மாநிலத்திடமும் வரிகளைப்பெற்று ஒட்டு மொத்த இந்தியாவின் நலனைக் காப்பார்கள்.

மேலோட்டமாக பார்க்கும் போது இது சரியானதாக தெரியும். ஆனால் இந்திய ஒன்றியம் ஒவ்வொரு மாநிலத்தின் அடிப்படை தேவைக்காக அந்த வரிப்பணத்தை முழுதும் செலவு செய்ய மாட்டார்கள்.

பின் எதற்கு செய்வார்கள்??
மாநிலத்தின் பாதுகாப்பிற்காக (முப்படை) பல லட்சக்கணக்கான கோடிகளை ஒவ்வொரு பட்ஜெட்டிலும் எடுத்து கொள்வார்கள். பின் கல்வி, மருத்துவம், போக்குவரத்து, விளையாட்டு, பேரிடர் நிவாரணம் என ஒதுக்குவார்கள்.

ஆனால் நம் அடிப்படை தேவைகள் என்பது பெரும்பாலும் உள்ளாட்சி நிர்வாகத்தில் தான் உள்ளது. அதற்கு மத்திய அரசிடமிருந்து ஒரு குறிப்பிட்ட அளவில் தொகை கிடைக்கிறது.

இருந்தாலும், நாம் இன்னும் நம் அடிப்படை வசதிகளில் பெரிதும் பின் தங்கி உள்ளோம்.

குறிப்பாக நீர் பிரச்னை, குப்பை மேலாண்மை, கழிவு மேலாண்மை, வடிகால் வசதி, சுகாதாரம்,வதரமான சாலைகள் என அனைத்திலும் பின் தங்கி உள்ளோம். இதன் அடிப்படை காரணம் என்ன?

ஒதுக்கப்படும் நிதி சரியான முறையில் அனைத்து உள்ளாட்சிகளையும் சென்று அடைகிறது? அப்படி சேர்ந்த நிதி முறையாக பயன்படுத்தப்படுகிறதா?

தவறு எங்கு நடந்தாலும் பாதிக்கப்படுவது மக்கள் தான்.

ஒவ்வொரு மத்திய, மாநில அரசின் பட்ஜெட்டிலும் பல்லாயிரம் கோடிகள் அடிப்படை வசதிகள் மற்றும் உள் கட்டமைப்புகளுக்காக ஒதுக்கப்படுகின்றன. அப்படி இருந்தும்

பெரிதாக எந்த பலனும் இல்லை.
ஊழல் என்பது தேசியமயமாக ஆகி விட்ட இந்த சூழலில் பரந்து விரிந்த நிர்வாகம் நேர்மையாக இருக்க வாய்ப்பில்லை.

எனவே நிர்வாகத்தை சிறு சிறு பகுதிகளாக பிரித்து கொள்ள வேண்டும். ஆங்கிலத்தில் சொல்வார்கள் mass production, production by maases.

Mass production என்பது ஒரே இடத்தில் ஒரு பொருளை தயார் செய்து பல லட்சம் மக்களுக்கு கொண்டு சேர்ப்பது. இப்படி செய்யும் போது அந்த ஒரே இடத்தில் உள்ள வளங்கள் சுரண்டப்படும். மேலும் அனைவருக்கும் கொண்டு சேர்ப்பதில் சிக்கல் இருக்கும். உதாரணம் பெப்சி, கோகோ கோலா போன்ற குளிர்பானங்கள்.

ஆனால் production by masses என்பது அந்த அந்த பகுதி மக்களுக்கு தேவையானவற்றை அந்த அந்த பகுதியிலேயே தயார் செய்து கொண்டு அங்கேயே விநியோகம் செய்வது. இப்படி செய்வதன் மூலம் வளங்கள் ஒரே இடத்தில் சுரண்டப்படாமல் சமமாக எடுக்கப்படும். மேலும் விநியோகம் செய்வதும் எளிது. வேலைவாய்ப்புகள் அதிகம் பேருக்கு சென்று அடையும்.

இதே போல, உள்ளாட்சிகளுக்கு என்று தனி அதிகாரம் வேண்டும். ஒவ்வொரு உள்ளாட்சிக்கும் ஒரு குறிப்பிட்ட நிதியை வருடா வருடம் வழங்கினோம் என்றால் அவர்கள் தேவைகளை அவர்கள் செய்து கொள்ள முடியும். இதை விளக்கமாக பார்ப்போம்.

தமிழ்நாட்டில் உள்ள உள்ளாட்சிகள் எண்ணிக்கை.

1. மாநகராட்சி = 12

2. நகராட்சி = 148

3. பேரூராட்சி = 561

4. ஊராட்சிகள் = 12618

5. ஊராட்சி ஒன்றியம் = 385

மக்கள் நெருக்கம் அளவிற்கு ஏற்றாற்போல் உள்ளாட்சிகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளது.

இதில் குறிப்பாக ஊராட்சி ஒன்றியம், ஊராட்சி, பேரூராட்சி போன்றவைகளின்

எண்ணிக்கை ஏறக்குறைய 13500 வருகிறது. இவற்றில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் வருடம் 3 கோடியை ஒதுக்கி, அவர்கள் அடிப்படை தேவைகள் அதாவது சாலை, குடிநீர் வசதி, நீர்ப் பங்கீடு, குளம் போன்றவை தூர்வாருதல், வாய்க்கால், வடிகால் தூர்வாருதல், அரசுப்பள்ளி மேம்பாடு ,தெரு மின் விளக்கு, நூலகம் மேலும் அவர்களுக்கு தேவையானவற்றை செய்துகொள்ளும்படி செய்யலாம். இதன்படி பார்த்தால் ஒவ்வொரு வருடமும் ஊராட்சி ஒன்றியத்திற்கு ஆகும் செலவு = ரூபாய் 1155 கோடி

அடுத்து ஒவ்வொரு ஊராட்சிக்கும் வருடம் 5 கோடி ஒதுக்க வேண்டும். அப்படி பார்க்கையில் வருடம் ஊராட்சிக்கு ஆகும் மொத்த செலவு = 63000 கோடி

இதே போல் பேரூராட்சிக்கு 7 கோடி வரை ஒதுக்கினால் = 3927 கோடி ரூ

பின் நகராட்சிகளுக்கு 10 கோடி எனில் = 1480 கோடி ரூபாய்

மாநகராட்சிகளுக்கு என்று தனி திட்டங்கள், தனி செயல்பாடுகள் வேண்டும். எனவே நாம் இதில் சேர்க்க வேண்டியது இல்லை.

எனவே மொத்த உள்ளாட்சிகளுக்கான வருடாந்திர செலவு = 70000கோடி ரூபாய்.

இது நாம் மத்திய அரசிற்கு கட்டும் வரியில் 60%மட்டுமே. ஆக மத்திய அரசும் ,மாநில அரசும் இணைந்து இந்த நிதியை கொடுக்க இயலும். அப்படி செய்தாலே அடிப்படை வசதிகளில் 80% நிறைவேற்றலாம்.

மேலும் நிதி எவ்ளோ ஒதுக்கப்பட்டு இருக்கிறது என்பது ஒவ்வொருவருக்கும் தெரியும். எனவே நிதியானது ஒரு சிறிய பகுதிக்கு என்னும் போது நிதி யாரிடம் உள்ளது ,எவ்வளவு உள்ளது என்பதை பொதுமக்கள் கண்காணிக்க செய்ய முடியும். ஒருவித வெளிப்படை தன்மை இருக்கும். மேலும் கிராம சபை கூட்டங்களில் அந்த நிதியை எவ்வாறு பயன்படுத்தலாம் என்ற ஆலோசனைகள் இருக்கும். பொதுமக்கள் நேரடியாக என்ன என்ன தேவைகள் நிறைவேற்றப்படவில்லை என தெரிந்துக் கொள்ள முடியும்.

இந்த நிதி என்பது அடிப்படை வசதிகளை செய்து கொள்ளவே மற்றும் சிறிய அளவில் உள்ள புதிய தேவைகளை நிறைவு செய்ய மட்டுமே. பெரிய பட்ஜெட்டில் நிறுவப்படும் புதிய தேவைகளுக்கு தனி நிதியை தான் பெற வேண்டும்.

இந்த முறையில் செய்யும் போது, ஒருவேளை ஒரு நகராட்சியில் உள்ள மொத்த குப்பைகளை அகற்ற 5 கோடி வரை செலவு ஆகிறது என்றால் இரண்டு வருடம் காத்திருந்து செய்து கொள்ள முடியும். அதே போல் மாதா மாதம் வேலைக்கு ஆள் அமர்த்தியும் நாம் பராமரிக்க முடியும். அதற்கான ஊதியத்தையும் வழங்க முடியும்.

எனவே இதை சாத்தியபடுத்துவதில் பெரிய பிரச்சனை ஒன்றும் இல்லை.ஆனாலும் இவற்றை இந்த அமைப்பு செய்ய விடாது.

சாத்தியப்படுத்துவதில் சில சிக்கல்கள் உள்ளன.

1. மாநில சுயாட்சி இல்லாமல் இதை நம்மால் சாத்தியப்படுத்த இயலாது. அளவுக்கு மீறி மத்திய அரசிற்கு வரிப்பணம் நாம் கொடுக்கிறோம். ஆனால் அவை நமக்கு எந்த வகையில் திருப்பி கிடைக்கிறது என்று பார்த்தால்,பெரிதாக இல்லை.


மத்திய அரசிற்கு கட்டும் வரிப்பணத்தில் 60%தொகையே போதுமானது. இங்குதான் மாநில சுயாட்சி என்பது முக்கியம் ஆகிறது. நாட்டின் பாதுகாப்பு, எரிபொருள், மற்றும் ரூபாய் நோட்டிற்கு மட்டும் இந்திய ஒன்றியத்தை நம்பி இருந்தால் போதுமானது. அதற்கு என்ன தொகையை கொடுக்க வேண்டுமோ, அதை மட்டும் கொடுக்கலாம். இப்படி செய்வதன் மூலம் பல்லாயிரம் கோடி மாநில வரிப்பணம், நம் வளர்ச்சி மேம்பாட்டிற்கு பயன்படும்.

2. அடுத்து அரசியல்வாதிகளின் சுய லாபம். இந்த உள்ளாட்சி நிதிகளுக்காக கொக்கு போன்று காத்திருக்கும் எண்ணற்ற அரசியல் பிழைத்தோர் இருக்கும் வரை இது சாத்தியம் இல்லை. அமைச்சர் முதல் நகராட்சி உறுப்பினர் வரை 5 ஆண்டுகளில் நினைத்து பார்க்க முடியாத அளவிற்கு சொத்துகள் குவிக்கிறார்கள். ருசி கண்ட பூனைகளாக உள்ள அவர்கள் நாட்டின் நிலையைப் பற்றி எப்படி சிந்திப்பார்கள்.

இருந்தாலும் இப்படி எல்லாம் செய்யலாம் என்பது ஒரு ஆலோசனை. அதை சாத்தியப்படுத்தலும் வரும் காலங்களில் நடக்கலாம்.

இன்றைய எழுச்சி மிகு நேர்மையான தலைமுறைகளின் கையில் உள்ளது நம் எதிர்காலம்.

- மன்னை செந்தில் பக்கிரிசாமி



# பெத்த மனம் பித்து பிள்ளை மனம் கல்லு

பஞ்சாய் மாறிய தலை
பஞ்சு மிட்டாய் கலரில் சேலை
வாழ்வதற்க்கு ஏதுமற்ற நிலை
செய்வதறியாத பொழுதில்
இறைவா! - உன் காலடியே சரணம்

மங்கலமாய் வாழ்வை தொடங்கி
பெரிய குடும்பத்தின் குரலுக்கு அடங்கி
கூப்பிட்ட கணவன் குரலுக்கெல்லாம்-
கூடி
பெற்றுப் போட்ட குழந்தைகள் ஆறு,

ஆணும் மூன்று,
பெண்ணும் மூன்று,
பேர் வைத்து பெரு வாழ்வு
வாழ்ந்து நானும் முடித்தேன்...

வயதாகி போன கணவன்,
ஒரு நாளில் அடக்கமாயும் போனான்.
யார் என்னை வைத்துப் பார்ப்பது,
சண்டையோ தினமும் நடந்தது...

ஆசையாய் வளர்த்த பிள்ளைகள்,
மனைவிக்கு அடங்கி தான்
போனார்கள்.

பெண் மக்களோ வா வெனச்
சொன்னாலும்
மனம் ஒப்பத்தான் இல்லையே...
என்ன செய்தும் என்னை கொல்ல
என்னாலும் முடியவில்லையே...

வாழ்ந்த போதெல்லாம்
இறைவனை ஓரளவே நினைத்து
வாழ்ந்ததனால்
முழு நேரம் நினைத்தபடி
வாழ்ந்து முடிக்க முடிவெடுத்தேன்...

பஞ்சையாய்... பராரிகளாய்...
அலைந்து திரியும்
முடியா கூட்டத்தின் நடுவே
நானும் வந்து கலந்தேன்...
இறைவனை மனமுருகி
வேண்டி நித்தமும்
தியானம் புரிந்தேன்...


இனி என்ன ?
பெற்ற பிள்ளைகள்
பேறு பெற்ற வாழ்வு
வாழனும்-அதையே
இறைவன் தலத்திலே
வேண்டுதலாய் வேண்டனும்...

என் பிள்ளைகளுக்கு
இதுபோலே நிலை
வேண்டாமே இறைவா.!!!

யாருக்குமே வேண்டாம்
என் நிலை!
யாருமற்ற நிலை!!!

**- இலக்கியா இளவரசன்**

# மன்னார்குடி ரா. ராஜேஷ்



எழுதும் தொடர் முதல் அத்தியாயம் (பகுதி 13)




சோமன் சென்ற சற்று நேரத்தில் சட்டென கண்விழிதான் ருத்ரன். வயிற்றின் விலாப் பகுதியில் வழிந்து கொண்டிருந்த ரத்தத்தை ஒரு கையால் அமர்த்தி பிடித்துக்கொண்டு

சோமனின் பச்சை குத்தப்பட்டிருந்த வரைபடத்தை அங்குமிங்குமாக தேடி கண்டுபிடித்து எடுத்து தனது இடைக்கச்சையை பத்திரப்படுத்திக்கொண்டு

வேறொரு துணியால் தான் வயிற்றில் குத்தப்பட்ட இடத்தில் இறுக கட்டிக்கொண்டு,

அவன் அறையில் அவனே ஏற்படுத்தி வைத்திருந்த ரகசிய துளையின் மூலமாக வெளியேறி,

தன் குதிரையில் கண்டராதித்தபுரத்தை நோக்கி உயிரை கையில் பிடித்துக் கொண்டு பறந்தான்.

புயலுக்கு முந்தைய புளுக்கத்தை போல
இறுக்கமாய் இருந்தது கண்டராதித்தபுரம்.

ஒற்றையடி குறுக்குவழி பாதையைக் கடந்து
கண்டாரதிதபுரத்தில் நுழைந்த ருத்திரனுக்கு
கண்கள் இருட்ட தொடங்கின. தலையை பலமாக உலுக்கி கொண்டு சுய நினைவில் இருக்க முயற்சித்த அவனின் கண்களில் தூரத்தில் இரண்டு மூன்று வீரர்கள் நிற்பது கண்டது. பலமிழந்து துவண்டு போயிருந்த கைகளுக்கும் மனதிற்கும் அவன் கண்ட காட்சி
பலத்தை உண்டாக்கியது என்றாலும் அது நீடிக்கவில்லை. வீரர்கள் நின்றிருந்த

இடத்தை நோக்கி தனது குதிரையை செலுத்திக்கொண்டு வந்தவனின் சுயநினைவு, இழந்து பிடி தளர்ந்து குதிரையிலிருந்து சரிய தொடங்கினான் ருத்ரன்.

தங்களை நோக்கி குதிரை ஒன்று வருவதையும் அதன் மீதிருக்கும் வீரன் சரிந்து விழுவதையும் கண்ட வீரர்கள் ஓடிவந்து தூக்கினார்கள். ருத்திரனை அதற்குள்ளாக பலவீரர்கள் கூடிவிட பலரும் பல யோசனைகள் சொல்ல அதற்குள்ளாக சசித்ரனுக்கு செய்தி எட்டியது. சம்பவ இடத்திற்கு வந்த சசிதரன், அங்கே தனது கடைசி மூச்சை வாங்கி கொண்டிருக்கும் ருத்ரனின் கைகளை ஆதரவாய் பற்றினார். இறுதியாக ஒருமுறை ருத்ரனின் இமைகள் திறந்தன. சசிதரனை கண்ட மகிழ்ச்சி கண்களில் கண்ணீர் வடிந்தது. இருந்த பலமெல்லாம் திரட்டி இடைக்கச்சையில் இருந்த அந்த வரைபடத்தை எடுத்து சசிதரனின் கையில் ஒப்படைத்து விட்டு பிரிந்தது ருத்ரனின் உயிர். கலங்கிய கண்களோடு எழுந்த சசிதரன், ருத்ரன் கொடுத்த வரைபடத்தை பத்திரப்படுத்திக் கொண்டு அங்கு இருந்த வீரர்களிடம் ருத்ரனின் உடலை செண்பகவனத்திற்கு எடுத்துச் செல்ல கட்டளையிட, அவரின் மனதிற்குள் தஞ்சை கோட்டையின் நிலவரம் என்னவென்று தெரியவில்லையே ? என்ற எண்ணம் ஓடியது.

முந்தைய நாள் இரவு தஞ்சை கோட்டைக்குள் அநிருத்தப் பிரம்மராயரின் விருந்தினர் அறையில் உறங்கச் சென்ற மாணிக்கத்தையும் கரியனையும் அத்தோடு மறந்து விட்டோம். தஞ்சைக் கோட்டை நிலவரத்தை இனி அவர்களோடு சேர்ந்து காண்போம்.

எத்தனை தாமதித்து உறங்கினாலும் சூரிய உதயத்திற்கு முன்பு எழுவது மாணிக்கத்தின் இயல்பாகிப் போனது. காலையிலேயே எழுந்து நீராடி நெற்றியில் திருநீறு இட்டு புது உடை மாற்றி தயாராகி இருந்தான் மாணிக்கம். ''படார்'' என்ற சத்தத்துடன் கதவு திறந்தது. இயல்பை மீறி வந்த சத்தத்தினால் மாணிக்கமும் கரியனும் சட்டென வாயிலை நோக்கினர் மாணிக்கத்தின் கை அவன் இடையில் செருகி வைத்திருந்த கைதடியை பற்றியது.

உறக்கம் கலையாத விழியோடு உள்ளே நுழைந்த ஆழ்வார்க்கடியாரை பார்த்த பிறகுதான் இருவரும் சமாதானம் ஆனார்கள்.

''அடடே, அருமை. பயணத்திற்கு செல்வது போல் தயாராக இருக்கிறீர்கள்'' என்று மாணிக்கத்தை கேட்டார் ஆழ்வார்க்கடியார்.
''ஆமாம் ஆழ்வார்க்கடியாரே வந்த வேலை முடிந்து விட்டது இனி என்ன செண்பகவனத்திற்கு திரும்ப வேண்டியதுதானே? அதற்காக தான் தயாராக இருக்கிறோம்'' என்றான் மாணிக்கம்.

''ஓ அப்படியா கதை! சரி செண்பகவனத்திற்குச் செல்லலாம், ஆனால் இப்போது நாம் ஒருவரை சந்திக்க இருக்கிறோம் அவரை சந்தித்து விட்டு பிறகு உனக்கு மனம் இருந்தால் செண்பகவனத்திற்கு செல்லலாம் சரியா'' என்ற ஆழ்வார்க்கடியார்.

யார் அவர் ? என்றான் மாணிக்கம்.

‘‘உனக்கு சண்டையிட கற்றுத்தந்த ஆசன் யார்?‘‘
என்றார் ஆழ்வார்க்கடியான்

‘‘என் தந்தை ‘‘ என்றான் மாணிக்கம்.

உன் தந்தையின் ஆசானை தான் பார்க்கப்போகிறோம். என்ன போகலாமா ?

என்று கேட்டார் ஆழ்வார்க்கடியான்

துள்ளி குதித்து எழுந்த மாணிக்கம், ‘‘வாருங்கள் இப்போதே போகலாம்‘‘ என்றான்.

அவர் யாராக இருக்கும் என்று தெரிந்துகொள்ளும் ஆவல், அவன் கண்களில் ஜொலித்தது.

‘‘போகலாம் போகலாம், ஆனால் ஒன்று,
அங்கு உன் திறமையை சோதிப்பார்கள்.

அதனால் கரியனை இங்கேயே விட்டுவிட்டு செல்வது நலம். இல்லை என்றால் அங்கு அவனால் தொந்தரவு ஏற்படலாம்‘‘ என்று கூறிய ஆழ்வார்க்கடியானை கோபமாக பார்த்த மாணிக்கம்‘‘ பார்த்தீர்களா இதற்காகத்தான் நான் முன்னமே சொன்னேன் நான் இங்கே தஞ்சைக்கு வரவில்லை என்று. என்னையும் கரியனையும் பிரிக்கும் எந்த செயலும் என்னால் ஈடுபட முடியாது. நான் செண்பகவனத்திற்கே செல்கிறேன்‘‘ என்றான்.

‘‘உனது கோப சுபாவம் எப்போது தான் மாறுமோ தெரியவில்லை .மாணிக்கம்‘‘ என்று அலுத்துக்கொண்ட ஆழ்வார்க்கடியார்
சரி அப்படி என்றால் ஒன்று செய்யலாம் கரியனும் உடன் வரட்டும் ஆனால் அங்கு என்ன நடந்தாலும் இவன் அமைதியாக இருக்க வேண்டும் என்று சொல்லி சரி வா போகலாம் என்று மூவரும் கோட்டைக்கு வெளியே இருந்த சின்னவர் களத்திற்கு திறந்த வெளி ரதத்தில் ஏறினார்கள். கரியனை ரததிற்குள் படுக்க சொன்ன மாணிக்கம் சேட்டைகள் எதுவும் செய்யகூடாது என்று மிரட்டினான்.
கரியனும் பயந்தவன் போல பாசாங்கு செய்து வாளால் மாணிக்கத்தை அடித்து விளையாடியது.

ரதத்தை ஒட்டிக்கொண்டு வந்த சாரதி அதனுள் ஏறியவர்கள் யார் என்று முதலில் கவனிக்கவில்லை.

சற்று தூரம் சென்றதும் ரதத்திற்குள் கேட்கும் சப்தங்கள் ஒரு மாதிரி இருக்கே என்று திரும்பி பார்த்தான் . பார்த்தவன் பயந்து பதறி‘‘ ஐயோ புலி‘‘ என்று கத்த போனவனின் வாயை வெகு லாவகமாக பொத்தினார் ஆழ்வார்க்கடியான்.

‘‘பயப்படாதே இது ஒன்றும் செய்யாது நான் இருக்கிறேன் உன் தைரியத்திற்கு பின்னால் திரும்பிப் பார்க்காமல் சாலையை கவனித்து ரதத்தை ஓட்டு என்ற ஆழ்வார்க்கடியான் கரியனையும் மாணிக்கத்தையும் பார்த்து கோபமாக முறைத்தார், இருவரும் அமைதியானார்கள்.

பெரிய போர்க்களம் போல காட்சியளித்து
அந்த சின்னவர் களம். எங்கு பார்த்தாலும்
ஆ ஊ என்று சத்தமிட்டுக் கொண்டு சண்டையிட்டுக் கொண்டும் வாள் சண்டை செய்து கொண்டும், குதிரை மீதிருந்து வாள் சண்டை செய்து கொண்டும்

ஈட்டி எறிந்து கொண்டும் அம்பு விட்டுக் கொண்டும் பயிற்சி எடுத்துக் கொண்டிருந்த அந்த இடம் ஒரே இரைச்சலாக இருந்தது இதையெல்லாம் புதிதாய் காண்பவருக்கு அங்கு போர் நடப்பது போலவே தோன்றும். அதே போன்றதொரு உணர்வு தான் மாணிக்கத்திற்கு எழுந்தது. இவர்கள் என்ன பயிற்சி எடுத்துக் கொள்கிறார்களா? இல்லை உண்மையில் சண்டை செய்கிறார்களா ? இத்தனை ஆக்ரோஷமாக மோதி கொள்கிறார்களே! என்று தனக்குத் தானே மனதிற்குள் பேசிக் கொண்டான்.

இவர்கள் வந்த ரதம் களத்தின் நடுநாயகமாய் இருந்த ஒரு காட்சி மேடையின் கீழே நின்றது ரதத்தில் இருந்து கீழே இறங்கிய ஆழ்வார்க்கடியான் காட்சி மேடையின் மீது ஏறி யாரிடமோ பேசிவிட்டு கீழே இறங்கி வந்தார் அவன் பின்னே 20 வயது மதிக்கத்தக்க ஒரு இளைஞனும் வந்தான். ஆழ்வார்க்கடியான் அந்த இளைஞனை நோக்கி, முகிலன் அதோ அந்த இடத்தில் இருப்பவன் தான் மாணிக்கம் என்றார். முகிலன் மாணிக்கத்தை பார்த்து இங்கு வா என்று கையை காட்டி அழைத்தான். மாணிக்கமும் ரதத்திலிருந்து கீழே இறங்கி வருவதற்கு முன்னே கரியனிடம் அமைதி காக்கும்படி சொல்லிவிட்டு முகிலனை நோக்கி போய் கொண்டிருந்த மாணிக்கத்தின் கன்னத்தில் ‘‘பளாரென்று‘‘ ஒரு அறை விழுந்தது.

மாணிக்கத்தை அறைந்தவன் யார்?

தொடரும்..........

# தீமைகளாலான தூயன் நானல்ல நீயுமல்ல

யாருமல்ல யாதுமல்ல
நிச்சயம் நான்....

முன்னால் ஒளிந்திருக்கும்
பரிசுத்த உன்னதத்தில்
பின்னால் வெளிக்காட்டி
மிரட்டிடும் மயக்கிடும்
மார்புநிமிர்ந்த வன்மங்கள் யாவற்றிலும்
ஆழத்துழாவினும் நானில்லை
தேவையாகும் யார்க்கும்
தேவையில்லை
கடுகளவும் கடலளவும்
நானும் நீயும் யாரும் யாதும்....

வெறிகொண்டு துளையிடும்
இன்பக் கனிவுகளால்
நுண்துளியாய் விழுந்து
வேரோடு சாய்த்திடும்
இரகசிய பிரவாகத்தால்
நம்பிடலாகாது சிறுநொடியும்
தீயவனால் அவதரித்த தூயனெனை...

நன்மைகளால் கிளர்ந்தெழும்
பொன்னாட்களில்
பாடமாய் உயிருக்குள்
திணித்தவை இனித்தவை
துரோகத் துரோணர்களின்
சாபப் போதனையானதால்
யாதிலும் உள்ளதைப்போல்
எப்படிக் கவர்ந்திட குழைந்திடும்
வர்ணங்கள் புணர்ந்த
நன்னெறி ஓவியங்களை
எங்கேயும் எப்போதும் என்றாலுமே
பூக்களை மலர்த்திடும்
மெல்லிய காற்றெனவும்
சிசுவினை மகிழ்த்தும்
வரமொளிர் பொம்மைகளாய்
மழைக்காடாய் மலைமேடாய்
தழைத்திருக்கிறேன்
ஒருவருக்கும் அகப்படா
மற்றுமொரு பக்கத்தில்
நானில்லா நீயுமில்லா
யாதுமில்லா யாருமில்லா
நான் நீ நாம்!

- பொன்.தெய்வா
ஐவேலி



ஓவியம்
போஸ்

# உதிரும் உதிரம்

உறங்கியதாலே
உலகில் நீயும்
உருவெடுத்தாய்

உடலில் உறவை
தேடிட நீயும்
அவள் மனதை
ஏனோ களை
எடுத்தாய்

அன்பை விதைத்து
நேசம் செழிக்க
ஏன்தான் நீயும்
அழுப்பெடுத்தாய்

உன்னை சுமந்ததும்
உனக்காய் சுமப்பதும்
பெண்தான் என்பதை
மறந்திருந்தாய்

இன்பம் கோடி
துன்பம் சிறிது என்று
அவளை நீயோ
வெறுத்துவிட்டாய்

உனக்காய் அவளும்
அடிமை என்று வாழ்
நாள் முழுதும்
கொடுத்துவிட்டாள்

போதும் போதும்
அவள் இன்பம் மீட்க
அவள் உதிரம்
உதிரும் நாளிலாவது
அவள் கஷ்டம்
புரிந்து நண்பனாகவாவது
மாறிவிடு
கண்ணாளனே ....!!!

எழுத்து
**ஆரூர் கவிஞன் தீன்**



S. நந்தா
பாரதிதாசன் நகர்
அசேசம்



# நடுகல்


திருச்சி பார்த்தி

## தகடூர் நாடு:

பொதுவாக தமிழகத்தின் பிற பகுதிகளை காட்டிலும் தகடூர் என அழைக்கப்பட்ட இன்றைய தர்மபுரி பகுதியில் நிறைய நடுகற்கள் கிடைக்கிறது! இதற்கு காரணம் இப்பகுதி எல்லைப்பகுதியில் அமைந்துள்ளதால் ஆதிக்கம் காரணமாய் போர்கள் அடிக்கடி நிகழ்ந்துள்ளது. நுளம்பர்கள், கங்கர்கள், வாணர்கள் அடிக்கடி போரிட்டு தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டியுள்ளனர். இப்போர்களில் இறந்தவீரர்களுக்கு நடுகற்கள் எடுக்கப்பட்டுள்ளது.

இதில் ஒரு நடுகல் மிக சுவாரசியமான வரலாற்றை தருகிறது.அதனை சிறிது கதை வடிவில் காண்போம்.

அரிமிதையமாவலி வாணராயர்:

தகடை, தகடூர், தகடாபுரி என இலக்கியங்களால் புகழப்பட்ட தகடூரின் ஒரு சிற்றரரசன் அரிமிதையன். இயல்பிலேயே தாமரைமலரின் புறஇதழ்களை போன்ற அமைப்பை உடைய ஊரானதால் ''தடங்கமலதடாகை'' என இலக்கியங்களால் புகழப்பட்ட தகடூரின் கங்கநாட்டையும், புறமலைநாட்டையும் தன்னகத்தே கொண்டு ஆள்கிறான் மாவலி குல அரிமிதையன். அவன் ஆட்சியேற்கும் சமயம் தமிழகமே ஒரு குழப்பமான சூழலில் இருந்தது. சுமார் 400 ஆண்டுகாலம் கோலோச்சிய பல்லவராட்சி முடிவுறும் தருவாயிலிருந்தது. 700 வருடங்களுக்கு முன் பெரியதாக பேசப்பட்ட பின் மறைந்துபோய் தற்போது புதிதாக சோழனும் ஆட்சியேற துடிக்கிறான்.

ஆகவே இந்த எல்லைப்பகுதியை தற்சமயம் கேட்பாரில்லை. ஆகவே அந்தந்த அரசர்கள் அவரவர் பகுதியை நிலைநாட்டுவதிலேயே கவனமாய் இருந்தனர். இயற்கையிலேயே மலைவளம் பொதிந்த தகடூரை அடைய நுளம்பனும், கங்கனும் அடிக்கடி போரிட்டு வருவதும், அரிமிதையன் அவர்களை விரட்டுவதும் வாடிக்கையாய் இருந்தது.

ஆனால் இவர்களில் மாறுபட்டு நுளம்பன் சிம்மபோத்தன், அரிமிதையனுக்கு நட்பாய் இருக்க விழைந்தான்.

அரிமிதையனும் அவனுடன் நட்பாய் இருக்க விழைந்து தன் தங்கை முறை உறவுப்பெண்ணை அவனுக்கு மணமுடித்தான். எனினும் நுளம்பன் மீது ஒரு கண்ணை

வைத்திருந்தான்.  நீண்ட நாளாய் இருந்த பகை இம்மணமுறையினால் சிலகாலம் மறைந்தது. அரிமிதையனின் மனைவி அச்சமயம் கருவுற்றிருந்தாள்.

சிம்மபோத்தன்:

அன்றைக்கு தான் தகடூரிலிருந்து ஓலை வந்தது, வாணருடன் மணஉறவு பூண்டாலும், அவனுடன் தோற்றது நுளம்பனை தூங்கவிடாமல் செய்தது, போதாதற்கு அவன் மணம் செய்த அரிமதையனின் சகோதரி வேறு தனது பிறந்தகம் குறித்த பெருமையை பேசி வெறுப்புணர்வை வேறு தூண்டினாள்.

ஆகவே வேண்டா வெறுப்பாய் அமைச்சரை ஓலை வாசிக்க சொன்னார்.

‘‘மகாபலிச்சக்கரவர்த்தின் வழிவந்த மாவலிவாணரான பெரும்புகழ் பெற்ற அரிமதையாரின் நம்பிராட்டியார் தற்சமயம் கருவுற்றிருக்கிறார். ஆகவே சகோதரர் முறையில், வரும் ஐப்பசி திங்கள் தங்களையழைத்து சில சடங்குகள் செய்ய கேட்டுக்கொள்கிறார்‘‘ என சாராம்சத்தை அமைச்சர் வாசித்து முடித்து கிளம்பினார்.

இச்செய்தி கேட்டதும் ஒரு விபரீத யோசனை மனதில் உதித்தது சிம்மபோத்தனுக்கு, அரிமிதையனுக்கு சகோதரர் யாரும் இல்லை, மனைவியும் தற்போதுதான் கருவுற்றுள்ளாள், விழாவிற்கு செல்வதுபோல படையை திரட்டி, அவனை கொன்றாள், வாரிசில்லாத அவன் நாடு தாமாகவே கைக்குகிட்டும். வாணன் குலமும் பூண்டோடு அழியும்.

இலக்கியங்களால் புகழப்பட்ட பழம்புகழ் வாணனை, நுளம்பன் ஒருவன் கொன்றான் என இனி வரலாறு பேசும் என்ற குரூர எண்ணம் அவன் மனதில் உதித்தது.

- தொடரும்

**- திருச்சி பார்த்தி**

# கார்ப்பரேட் எனும் கொள்ளைக்காரன்



அருள்பாண்டியன்
பூவனூர்

கரும்பு பிழியும் இயந்திரத்தில் சிக்கிய கரும்பு தான் இந்த வேலைக்காரன், அனைத்தையும்  உறிஞ்சிய பின்பு வெளியே எறியப்படுவோம்.

தனக்கென எதுவும் இல்லாமல் குடும்ப சூழ்நிலை உணர்ந்து சரியான பாதுகாப்பு இல்லாத சூழலில் கூட வேலை செய்யும் பல இளைஞர்கள். உணவென்பது தோணும் போது, பசி என்பது மறந்து போய் இயந்திரங்களோடு வேலை பார்க்கும் இயந்திரமாகவே மாறி விடுகின்றனர்.

அரசு எந்த நிறுவனத்தையும் முறையாக ஆய்வு செய்வதில்லை. கரணம் தப்பினால் மரணம் என்று தெரிந்தும் வேலை செய்கிறார்கள். அவர்களின் பாதுகாப்பு பற்றி எந்த நிறுவனமும் கவலை கொள்வதில்லை. அவர்களுக்கு தேவை உற்பத்தி, சில பன்னாட்டு நிறுவனங்களை தவிர பல நிறுவனங்கள் இளைஞர்களுக்கு சரியான ஊதியம் வழங்குவதில்லை.

வேலை இல்லா நிலையைப் பயன்படுத்திக்கொண்டு குறைந்த ஊதியத்தில் கொத்தடிமை போல் வேலை வாங்குகிறது.

இன்னும் சில நிறுவனங்களில் ஒப்பந்த தொழிலாளர்கள் மிக மோசமாக நடத்தப்படுகின்றனர். ஊழியர்களை அடிப்பது, கொச்சை வார்த்தைகளைப் பயன்படுத்துவது, போன்ற செயல்களில் ஈடுபடுகிறது.
பிற மாநிலத்தவரை மிக குறைந்த ஊதியத்தில் வேலைக்கு அழைத்து வருகிறது. அவர்களுக்கு எது நடந்தாலும் கேட்க ஆள் இல்லை
பொறியியல் படித்தவர்கள் இன்னும் கவலைக்கிடம், அவர்களின் வேலையில்லா சூழலைப் பயன்படுத்தி பயிற்சி என்ற பெயரில் பயன்படுத்தி கொள்கின்றன.

இவ்வளவு அட்டூழியங்களை எதிர்த்து கேள்வி கேட்பவர்களை வேலையை விட்டு தூக்குகிறது, ஊதியத்தில் கை வைக்கிறது.
தொழிலாளர் விதிகளுக்குட்பட்டு எந்த நிறுவனமும் செயல்படுபதில்லை.

நிரந்தர ஊழியர்களை மிக குறைவாக வைத்திருப்பதால் அவர்களால் எதுவும் செய்ய முடிவதில்லை.

இந்த நிறுவனங்களின் இந்த போக்குகள் பற்றி எந்த ஊடகங்களிலும் பெரிதாக வருவதில்லை. இது பெரும்பாலும் வெளியில் தெரிவது கூட இல்லை.

இதற்கு முதல் காரணம் அரசும் நாமும் தான். நாம் நம் செய்த தொழில்களை மறந்து நிறுவனங்களில் அடிமையாக தயராகிவிட்டோம். இனிவரும் தலைமுறையாவது தனக்கென ஒரு பாதை அமைத்துக்கொள்ளும் படி வழிக்காட்டுங்கள் கடைசிவரையில் ஊழியனாகவே இருந்து இறக்க வேண்டாம்

**- சி. அருள்பாண்டியன்**
பூவனூர்

---

# சாபநாட்கள்

காற்றும் புகாமல் இறுக மூடி
மௌனித்திருக்கும் சிற்றறையில்
எளிதாய் நுழைந்து விட்ட
நண்பகல் கனவோடு
நெடுநாளாய் தொலைந்திருந்த
நேந்துவிட்ட பலிகடா
பதற்றங்கள் துளியின்றி
காத்திடும் தைரியத்தோடு எதிர்நிற்க
முந்திடும் கடும்வலி
பெரும்பகையைக் கட்டவிழ்த்துக்
குருதியில் மூழ்கடிக்கும்
மெல்ல உயிர்க்கசியும்


பிரேதத்தின் துடித்தலை
இலாவகமாய் போக்கி
யாம வனத்தின்
இரகசிய பொந்தினில் திணித்த
ஆத்ம நிம்மதியோடு மீள்கையில்
ஊரெங்கும் தெருவெங்கும்
அறையெங்கும் குடலைமுறுக்கி
யாவற்றையும் தம்பட்டமிடும்
அழுகிச்சிதைகிற
தாங்கொணா துர்நாற்றம்...

கழுகின் விழிகளில்
தப்பிக்க இயலாமல்
கூனிக்குறுகும் வாழ்வோடு
எங்கனம் கடத்திட இயலும்
இன்னும் நிஜப்படும்
பழிசுமந்த சாபநாட்களை!

**- பொன். தெய்வா**
ஐவேலி

# புர்ஜ் கலிஃபா

எல்லா நாடுகளின் கண்களும் நம் மேல் தான் இருக்க வேண்டும் என்பதற்காக அரபு நாடுகள் முயற்சிக்காதது எதுவுமே இல்லை என்றே சொல்லலாம். அதில் ஒன்று தான் இந்த புர்ஜ் கலிஃபா.



828 மீட்டர் (2217அடி) உயரத்திற்கு உலகிலேயே மிக பெரிய கட்டிடத்தை குறுகிய கால கட்டடத்தில் பல்வேறு அதிநவீன தொழில்நுட்ப வசதியுடன் உருவாக்கியுள்ளார்கள். மிக உயரமான Skyscraper என்ற சாதனையையும் புர்ஜ் கலிஃபா பெற்றுள்ளது.

இதற்காக 1.5 பில்லியன் டாலர்கள் செலவிட்டுள்ளார்கள். இதற்கு முதலில் புர்ஜ் துபாய் என்றே பெயர் வைத்தார்கள், பின் கட்டிட பணியில் பொருளாதார ரீதியாக பெரும் உதவி செய்த அபுதாபி மன்னர் கலிஃபா பின் சைய்த் அல் நயீன் பெயரைச் சேர்த்து நன்றி தெரிவிக்கும் விதமாக புர்ஜ் கலிஃபா என பெயர் மாற்றி அமைத்தார்கள்.

2004 ம் ஆண்டு துவங்கப்பட்ட இக்கட்டிடமானது, 163 அடுக்குகளைக் கொண்டு 2009 ல் கட்டி முடிக்கப்பட்டு 2010 ல் திறப்பு விழா நடத்தியுள்ளார்கள். இதில் 157 அடுக்குகள் பயன்பாட்டு தளங்கள் மற்றும் மீதமுள்ளவை கட்டிட பராமரிப்புக்கான கட்டுப்பாட்டு அறைகளாக ஒதுக்கியுள்ளார்கள்.





ஐம்பத்தேழு மின்தூக்கிகள்,
முப்பதாயிரம் வீடுகள்,
ஒன்பது உணவக விடுதிகள்,
நீரூற்றுகள் (Dubai Fountain),
அதிக உயரத்தில் இருந்து பார்ப்பதற்கான தளம் (Observation Deck),
பதினொரு ஹெக்டேர் அளவில் பூங்கா,
பத்தொன்பது மிக உயர குடியிருப்புகள் (Skyscraper) என பிரமாண்டத்தின் உச்சம் தொட்டுள்ளார்கள்.

இதில் நான் கண்டு வியந்தது என்னவென்றால், இங்குள்ள மின்தூக்கி (Elevator) ஒரு நொடிக்கு 10 மீட்டர் உயரம் செல்கிறது. அதுவும் எந்தவொரு அதிர்வும் இல்லாமல், நாம் செல்வதே தெரியாத அளவிற்கு சிறப்பாக செயல்படுத்தியுள்ளார்கள்.
மேலும் பனிமூட்டம் குறைவாக உள்ள நாட்களில் இக்கட்டிடத்தில் இருந்து ஈரான் நாட்டின் கடற்கரையைக் காணலாம்.

Dubai Fountain வடிவமைப்பிற்காக 217 மில்லியன் டாலர்களை செலவிட்டுள்ளார்கள். இதில் 6600 விளக்குகள், ஐம்பது வண்ண படக்காட்சி இயந்திரங்கள் (Coloured Projectors - இவை 270 மீட்டர் தூரம் வரை தெளிவாக படத்தை காட்டும்), நூற்றைம்பது உயரத்திற்கு நீரை பீய்ச்சி அடிக்கும் இயந்திரங்களும் அதனுடன் சேர்த்து அரேபிய இசையும் என உலகின் மிக பெரிய இரண்டாவது Choreographed Fountain என்ற சாதனையையும் படைத்துள்ளது.

Willies Tower மற்றும் One World Trade Center ஐ வடிவமைத்த Skidmore, Owings



Merril என்ற அமெரிக்க நிறுவனத்தின் Adrian Smith என்பவர் தான் புர்ஜ் கலிஃபா கட்டிடத்தை வடிவமைத்தவர். இக்கட்டிடத்தை கட்டி முடிப்பதற்கான முதன்மை ஒப்பந்தக்காரராக Samsung CT நிறுவனமும், கட்டமைப்பு பொறியியல் (Structural Engineering) ஒப்பந்தத்தை Bill Baker என்பவரும் ஏற்றுக் கொண்டு திறமையை வெளிப்படுத்தியுள்ளார்கள்.



Neo Futurism என்ற வடிவமைப்பு யுத்தியைக் கொண்டு பல்வகை பயன்பாட்டுடன் அதாவது வீட்டு குடியிருப்புகள், அலுவலகம், விளையாட்டு மைதானம், வாகன நிறுத்துமிடம், செயற்கை ஏரி, வணிக வளாகங்கள் என அனைத்தையும் ஒரே புள்ளியில் கொண்டு வந்து நிறுத்தியுள்ளார்கள்.

இரா. செந்தில் குமரன் (மன்னார்குடி)

---

# மே தினமே வருக

உழுது உழைச்சி
நெல்லு கண்டோம்,
ஒரு வேளை கஞ்சிக்கே
ஓடாய் தேய்கிறோம்!

இழைந்து நெய்து
துணிகள் செஞ்சோம்,
இடுப்பு துணிக்கே
இங்கே வழியினைக்
காணோம்!

உயர உயர
கட்டிடம் செஞ்சோம்,
ஒழுகும் குடிசைக்கே
உத்தரவாதம் காணோம்!

இயந்திரத்தோடு
இயந்திரமாய்
இடைவிடாது இயங்கினோம்,
தேய்மானம் எங்கள்
வாழ்க்கையில் மட்டும்!

பாதி வயிறு சோறு,
இடுப்புக்கு கீழே ஆடை,
ஒழுகும் குடிசை,
இயந்திர வாழ்க்கை!

இருப்பினும் -
வரவேற்கிறோம்
இந்த முறையும் -
மே தினத்தை...
இப்போதாவது
விடியாதா
என்ற புதிய நம்பிக்கையோடு!



முனைவர். சா.சம்பத்
மன்னார்குடி

## மழை

ஆளில்லா தெருக்களில்
திடீர் நெரிசல்
கோடை மழை!

## உறவுகள்

ஆழ்ந்த உறக்கம் வரை உன்னுடன்
நடைபழகும் அழகிய கள்வன்(ர்)
உறவுகள்!

## நெகிழி

எத்தனை தடைகளைத் தாண்டியும்
தோல்வியே நமக்கு கிடைக்கிறது
அழிக்கமுடியாத மண்ணில்
ஈடப்படும் நெகிழிகளால்

## சட்டம்

ஒவ்வொரு வரிகளிலும்
ஏகாந்தத்துடன்
எழுதப்படும் சட்டங்கள்,
இன்றுவரை ஏட்டில் மட்டும்!



- பா.தமிழரசி

இளங்கலை தமிழ்
அ.வீரைய வாண்டையார் நினைவு ஸ்ரீ
பூஷ்பம் கல்லூரி
பூண்டி

# நீயே என் உலகம்

அலைவரிசையில் கேட்டுரசித்திடும்
பாடலாய் இசைந்து கொண்டிருக்கிறாய்!

என் உயிர் செல்லுக்குள்
தகர்த்தெரிந்த நிமிடங்களில்
ஒளிபிம்பமாய் வாழ்ந்து செல்கிறாய்!

கடந்துவிட்ட நொடிகளில்
செல்லரித்த நேரத்திலும் புல்லரிக்க
வைக்கின்றன உன் பார்வைகள்!

என் சிந்தனைகளில்
பழுதுபட்ட உன் நெஞ்சங்களில்
பாதுகாக்கபட்டு வருகிறேன்-
எழுதப்பட்ட சுவடுகளாய்
செதுக்கிவிட்டு செல்கிறாய்!

உன் அன்பில்
ஒதுக்கப்பட்டுவிட்டேன் என்னையே
எனக்குள் - உனக்காக எதிர்வீட்டு
முற்றக்கோலமாய் அழகுடனே வாழ்கிறாய்
பிறருக்கு,
எனக்கு மட்டும் என்னை வரவேற்கும்
என்வீட்டு முற்றமாய் நீ
உழைத்து வந்திட்ட எனக்கு உணவூட்டும்
தெய்வம் வாழ்கிறது என்வீட்டில்
உன்னைவிட வேறுபிம்பம் எனக்கு
துணையாக அருகில் இல்லை இவ்வுலகில்

நீயே என் உலகம்
இவள் என் அம்மா

- அகிலா தியாகராஜன்
(ஆயக்காரன்புலம்)

# பாதுகாப்பு இல்லா வளாகமும், பயிற்சியில்லா மாணாக்கர்களும்...

நேரம் காலை: 7:10

மகன்:
அப்பா சாய்ந்தரம் வரும்போது  முறுக்கு வாங்கிட்டு வாப்பா

மனைவி:
என்னங்க நாளைக்கு குழு கட்டனும் காசோட வாங்க

கணவன்:
சரி, சரி
கிளம்புறேன்.

நேரம் காலை 10:10

ஏம்மா, உன் கணவர்
பட்டறை தீ விபத்துல
செத்துட்டாருடி.....

இது கதையல்ல,
நிஜம்.

நம் ஊரில் புதிது புதிதாக
கடைதிறந்தால்
நாம் செல்வதும்
அந்த கடையில் உள்ள பொருட்களை வாங்குவதும் வழக்கமாகி விட்டது.

ஆனால் அந்த கடையில் உள்ள பொருட்கள் நல்லதா என்றும் பார்ப்பதில்லை. கடையில் பாதுகாப்பு உள்ளதா என்றும் கேள்வி எழுப்புவதும் இல்லை.

புதிதாக ஒரு வணிக வளாகம் கட்டும் உரிமையாளர் கடையைச் சுற்றி கேமரா வைத்திருப்பார். ஏனென்றால் அவரின் பொருட்கள் காணாமல் போக கூடும் என்று

ஆனால் நமது உயிர் காணாமல் போனால்?

புரியவில்லையா?

ஒரு வணிகவளாக கட்டிடம் இயங்க தேவையான சில
(சட்டபூர்வமாக)

கட்டிட உறுதி
வணிகத்திற்கான உரிமம்
மக்களாகிய நாம் கூடும் போது
பாதுகாப்புக்கான அவசர வழிகள்
திடீரென தீ பிடித்தால் அணைக்கும் இயந்திரம், தீ அணைப்பான்
கடையில் தீயோ வேறு ஏதும் அசாம்பாவிதமோ நடந்தால் தெரிவிக்க அலாரம்
கடை மாடியாக இருப்பின்
குழந்தைகளோ அல்லது யாரேனும் தவறி விழுக நேரிட்டால் அவர்களை பாதுகாக்க ஓர் பயிற்சி பெற்ற நபர் கட்டாயம் இருக்க வேண்டும்.

ஆனால் இது எதுவுமே இப்போது
திறப்பு விழா காணும்
வணிகவளாகங்களில் (திரையரங்கம், கல்விநிறுவனம்) இருப்பதும் இல்லை, அதை நாம் கேட்பதும் இல்லை.

நம் உயிரை பாதுக்காக்க, இது இல்லாத இடங்களில் நமக்கு என்ன வேலை?
சரி அனைத்தும் உள்ளது, இதை எப்படி கையாள்வது?

சில மின்சார சாதனங்களில் (கணினி, குளிர்சாதன பெட்டி)
தீ பிடித்தால் தண்ணீர் ஊற்றி அணைக்க கூடாது. உங்கள்பக்கத்தில் உள்ள கடை ஊழியரிடம் கூறலாம். மெயின் சுச்சை அணைக்கலாம். அனைவரையும் வளாகத்தை விட்டு வெளியேற சொல்லி கூறலாம்.

பதட்டம் கூடாது, தீ பரவும் இடத்தை சுற்றி நிற்க கூடாது. இன்னும் பல உள்ளன.

சரி இதைப் பற்றி கல்வி பயிலும் மாணவர்களுக்கென தனி பயிற்சி பிரிவு உள்ளது (தீ மற்றும் பாதுக்காப்பு)

இதை கற்றால் நடக்கும் நன்மைகள்

நம் இடத்தில் தீ பிடித்தால் அணைக்க உதவும்,
ஒரு வீட்டு மாடியில் குழந்தை மாட்டிக் கொண்டால் காப்பாற்ற உதவும்.

அதைவிட இதை படித்த மாணவர்களுக்கு நல்ல வேலைவாய்ப்பு(எஸ்.ஒ பாதுகாப்பு அதிகாரி)

இவ்வளவு உள்ளது. ஆனால் இதை யாரும் முறையாக படிப்பதும் இல்லை, பகிர்வதும் இல்லை. என்ன செய்ய நானும் இந்த படிப்பை மூன்று மாதம் படித்து ஆர்வம் இல்லாமல் வெளியேறினேன்.

ஆனால் என்கூட படித்த நண்பர்கள் பலர் மக்களுக்கு உதவியும் செய்கிறார்கள், நல்ல வேலையிலும் உள்ளார்கள்.

பாதுகாப்பாக வாழ கற்றுக் கொள்வோம்.
பிறருக்கும் கற்றுக் கொடுப்போம்.

நன்றி

– பிரசன்னா

# என் பித்தனின் சில உண்மைகள்

அன்புள்ள அப்பா
கருவறை வாசம் கண்டேன்  அம்மாவினுள்!!

கடவுளின் நேசம் கொண்டேன் உன்னில்!!

கருவறைக்குள் நான் தவித்த பொழுது
கரை சேர கற்று தந்தவள் தாய்!
வாழ்க்கை கடலில் நான் தத்தளித்த பொழுது
கரை சேர கற்று தந்தவர் என் தந்தை!
தினம் கடவுளை கும்புடுகிறீர்கள்!!

ஆனால்
நான் தினமும் கடவுளுடன் தான்
வாழ்கிறேன்!!

கணம் கணமா கஷ்டங்களை கண்டுள்ளார்!!

ஆனால்
எங்களை ஒரு பொழுதும் கண்ணீர்
சிந்தவிட்டதில்லை!!

கதை நிறைய சொல்வார்!
காலங்களும் மனிதர்களும் எப்படி நம்மை
வெல்லும் என்று!
புரிதல் என்பதே கிடையாது, புண்ணியம் பல!
புதிய புதிய கடன்படுவார்
பிள்ளைகளுக்காக!!

ஆனால்
புத்தியே வராது!
பிள்ளைகள் வேலைக்கு சென்றால்!!

பித்து பிடித்த பல விபரீதங்கள் என்று
அஞ்சுவர்!
நான் என்னவோ, அவர் செல்ல மகள் தான்!

அவர் கொடுக்கும் முத்தம் கடவுளின்
முத்தம் அல்லவா!

முதல்முதற் கடவுள் பிள்ளையார்
உலகிற்கு தான்!

உலகமே என் வீடு,
அதில் என் தந்தை கடவுள்,
கடைகுட்டி பிள்ளை நான்,
குறும்புக்கார பிள்ளை நான்,
காரணம் இல்லாமல் பேச மாட்டேன்,
கருவறையில் சுமந்தவளை மறக்க
மாட்டேன்!

உருவாக்கியவற்றை வெறுக்க
மாட்டேன்!!

எனக்கு இன்னும் ஏழு ஜென்மம்
இருந்தாலும்
இது ஏழாவது ஜென்மமாக இருந்தாலும்
உன் மகளாகவே பிறக்க வேண்டும்,
இறக்க வேண்டும்.

என் அன்பு கடலின் அலையான
தந்தையே,
கடல் இருக்கும் வரை ஓயாது உந்தன்
ஓசை,

என் ஆருயிர் அப்பா!



- எழிலரசி
முதலாம் ஆண்டு புவியியல் துறை,
அ.வீரைய வாண்டையார் நினைவு
ஸ்ரீ பூஷ்பம் கல்லூரி
பூண்டி

# இ. தொ. க.

கோவிந்த் ஐயர், ஐஐடி - இல் கணினி அறிவியல் துறை பேராசிரியராக பணிபுரிகிறார். அவரது மனைவி கிரிஜா, இவர்களது மகள் அருணா. சென்னையிலுள்ள மென்பொருள் நிறுவனத்தில் பணிபுரிகிறார்.

10.11.2017 வரை அவர்கள் எந்தவொரு கஷ்டமும் இன்றி அமைதியான வாழ்க்கை வாழ்ந்து வந்தனர். அதன் பிறகு மோகன்ராஜ் எனும் இளைஞரிடமிருந்து பேரழிவு போன்ற பிரச்சனை வந்தது. அன்று பகல் நேரம், அவரது நண்பர் லக்ஷ்மி என்பவரது காரில் ஐஐடி வளாகத்திற்குப் பயணித்தார் கோவிந்த் ஐயர்.

திடீரென தெரியாத நபர் முலம் ஒரு அழைப்பு வந்தது, அவரது மகள் கடத்தப்பட்டார் என்று!.

அவன் ஐயரிடம் ஒரு காரியம் ஆக வேண்டும், அதனால் கடத்தியுள்ளேன் என்றான்.

கடத்தல் சம்பவம் பற்றி யாரிடமும் சொல்ல கூடாது, உங்கள் மனைவியும் சேர்த்து தான் என்று அவன் எச்சரித்தான்.
லக்ஷ்மி சாரும் உங்கள் பயணத்தில் கூட வர வேண்டும் என்று செந்தில், கோவிந்தனிடம் கூறினான்.

கோவிந்த் ஐயர் ஏற்றுக்கொண்டார். லக்ஷ்மி சார், என்ன நடந்தது என்று கேட்டார்.

கோவிந்த் ஐயர் தன் பெண் கடத்தல் பற்றி கூறினார். அவருக்கு கடத்தல்காரன் பற்றி எந்தவொரு குறிப்பும் இல்லை

அது அருணாவின் பாலியல் துஷ்பிரயோகமாக இருக்கலாம் என்று பயந்தார்.

ஒரு மத்தியதர வர்க்க கல்வியறிவுடைய குடும்பமாக இருப்பதால், எந்தவொரு சூழ்நிலையிலும் யாரிடமும் எந்த பிரச்சனைக்கும் போகாதவர்.

கடத்தல்காரன் செந்தில் அவரை அழைத்தான்,
5 லட்சம் தொகை கேட்டான் மற்றும்
நீங்கள் போலீஸ் புகார் பதிவு செய்ய விரும்பினால் உன் மகளின் உயிர்க்கு நான் உத்தரவாதம் இல்லை என்றான்.

கோவிந்த் ஐயர் நான் பணத்தை ஏற்பாடு செய்கிறேன் நீ என் மகளை எதுவும் செய்யாதே என்று கேட்டுக்கொண்டார். செந்தில் ஒரு புன்னகையுடன் , அது உங்க கையில் தான்

என்றான். கோவிந்த் ஐயர் பணத்தை ஏற்பாடு செய்ய ஆரம்பித்தார்.

திருவான்மியூருக்கு வந்து, இ.சி.ர் ரோட்டைக் கடந்து ஒரு டோல்கேட் இருக்கும். அதை தாண்டி புஹாரி ஹோட்டல் இருக்கும், அதன் அருகே காத்திருங்கள் என்றான் செந்தில்.

கோவிந்த் அய்யர்  லக்ஷ்மி  சாரிடம், நாம் இ.சி.ர் அவசரமாக போக வேண்டும்.

இருவரும் புஹாரி ஹோட்டலை நோக்கி பயணத்தை தொடங்கினர்.

ஒரு மணி நேரத்திற்குள் அடைந்தனர்
சில மணிநேரங்களுக்கு பிறகு அவரை அழைத்தான் செந்தில். புஹாரி ஹோட்டலுக்கு முன் ஒரு இடது புறம்  உள்ள சாலையில் உள்ளே வர சொன்னான், அவர்கள் தொடர்ந்து வந்தனர்.

செந்தில் அவர்களை பார்த்தான், வீட்டிற்குள் அவரது காரை எடுத்துக் கொண்டு வருமாறு கூறினான். கோவிந்த் ஐயர் பையை செந்திலை நோக்கி எறிந்துவிட்டு தனது மகளை விட்டுவிடும்படி கேட்டார்.

செந்தில் புன்னகை முகத்துடன்
''உங்கள் தகுதிக்கு நான் ஒன்றைச் செய்ய விரும்புகிறேன்''

செந்தில் அறையில் அருணாவை காட்டினான் மற்றும் அவள் ஒரு மின் இணைப்புடன் இணைந்திருப்பதாக எச்சரித்தான்,
லக்ஷ்மி சார், அருணா இருந்த  அறையில் பூட்டப்பட்டார்.

செந்தில் அருணாவின் கைபேசி எடுத்து, ஐயர் மனைவி கிரிஜாவிற்கு அருணாவை போல்

அப்பாவும் லக்ஷ்மி சாரியும்  என்னை கடத்தி ஐஐடில் கட்டி வைத்து உள்ளதாக குறுஞ்செய்தி அனுப்பி வைத்தான் செந்தில்.

கிரிஜா உடனே அதிர்ச்சி அடைந்து கல்லூரிக்கு விரைந்து போனார்.

அங்கே கணவர் அலுவலகம் சென்று பார்த்தார் மேலும் அவளுக்கு வந்த செய்தி பற்றி அங்கே உள்ளவரிடம் கூறினார்.

செந்தில் அவன் செய்வது அனைத்தையும்  ஐயரிடம் சொல்லி கொண்டு வந்தான்.

ஐயருக்கு ஒன்றும் புரியவில்லை.

அங்கே உள்ள கிளார்க் வினோத், உதவ முன் வந்தான். அவர்கள் வளாகம் முழுவதும் சுற்றி வந்தனர், அவர்களை கண்டுபிடிக்க இயலவில்லை.

வினோத் நுழைவு பதிவு பார்க்கலாம் என்றான்.
அங்கே வண்டி இல்லை என்பதால் குழப்பத்தில் இருந்தனர். இருவரும் காவல் நிலையத்தில் புகார் பதிவு செய்தனர்.

இப்போது கிரிஜா கைபேசிக்கு அருணாவின் கைபேசி முலம் வாட்ஸ்அப்பில் இருந்து லோக்'கேஷன் குறுஞ்செய்தி வந்தது.

காவல் துறை அதிகாரியிடம் குறுஞ்செய்தி பற்றி கூறினர். இருவரும் காவல் துறை அதிகாரியுடன் அங்கே புறப்பட்டனர்

கோவிந்த் ஐயர்: யார் நீ? உனக்கு என்ன வேண்டும்?

செந்தில்:
நான் உங்களுக்கு என்னை அறிமுகப்படுத்தவில்லை அல்லவா..?
மோகன் ராஜ் ஒரு மாணவன் உங்களுக்குத் தெரியுமா? அந்த மாணவர் உங்கள் கல்லூரியில் படுகொலை செய்யப்பட்டார்

கோவிந்த் ஐயர்: (ஆழமாக யோசித்து)

ஆமாம், ஆனால் அவர் தற்கொலை முயற்சி. கொலை இல்லையே!

செந்தில்: நடிக்காதீங்க கோவிந்த் ஐயர்,
சாதி வைத்து அவனை பாரபட்சம் காட்டி நீங்கள் அவனை கொன்றீர்கள், மேலும் தேர்வில் குறைந்த மதிப்பெண்களை போட்டு
அவனை மனவுளைச்சலுக்கு ஆளாக்கி கொன்றீர்கள். அவனுக்கு வேலை கிடைத்துவிட்டது, ஆனால் நீ அவனது ப்ராஜட்டை முடிக்கமால் அவனை நீயும் லக்ஷ்மி சாரும் வேலை பெறாதவாறு செய்தீர்கள்.

ஐ. ஐ. டி பிராமணர்களுக்காக மட்டுமா என்ன?
இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி
அல்லது ஐயர் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜியா??
சொல்லுங்க

கோவிந்த் ஐயர்: இது ஒரு தவறான புரிதல்.
நான் அவருக்கு அழுத்தம் கொடுக்கவில்லை, அவருக்கு எதிராக எதுவும்

செய்யவில்லை.

செந்தில்: உன் வாயை மூடு
இல்லையென்றால், உன் மகள் கொல்லப்படுவாள்.

மோகன் என்னுடைய நண்பன். அவனுடைய கிராமத்திலே முதல் பட்டதாரி, அவனைப் பற்றி நாங்க நிறைய கனவு கண்டோம், இப்படி பண்ணியிட்டீங்களேடா!

இவ்வளவு படித்தும் சாதி வெறி விடலடா உங்களுக்கு. அதுசரி, அதை உருவாக்கியதே நீங்க தானே!
சாவை விட பெரிய கொடுமை நான் உனக்கு செய்ய போவது!

நான் இப்போது சொல்வதை கேள், இல்லையேல் உன் மகள் கொல்லப்படுவாள்.
ஒரு கடிதம் எழுது உன் தற்கொலை பற்றி,
நானும் என் நண்பன் லக்ஷ்மி சாரும்,
என் மகளின் மீது ஆசைப்பட்டு
அவளை கடத்தி கற்பழிப்பு செய்ய முயன்றோம்.
ஆனால் நான் செய்தது தவறு என்று உணர்ந்து
அந்த கொடிய செயலை கைவிட்டேன் என

என் சாவுக்கு யாரும் காரணம் இல்லை,
மேலும் லக்ஷ்மி சாரை நான்தான் கொன்றேன்
என்று எழுதும்படி சொன்னான்.

கோவிந்த் ஐயர் அமைதியாக இருந்தார்.
செந்தில் லக்ஷ்மி சாரை கொன்றான்.
பிறகு அய்யரிடம் லக்ஷ்மி சாரை கொன்ற கத்தியைக் கொடுத்து தற்கொலை செய்து கொள்ள சொன்னான். செந்தில், இருவரும் இறந்தவுடன் அங்கிருந்து புறப்பட்டான்.

அறையில் இருந்த அருணாவை மீட்டு அவரது அம்மாவிடம் ஒப்படைத்தனர். செந்தில் அந்த பணத்தை எடுத்து மோகன் வீட்டில் கொடுத்து அவனது தம்பி படிப்பு செலவைப் பார்த்துக்கொள்ளும்படி சொன்னான்..

– நிழலன்

# என் மகள் (கதை)

‘எனக்கு மருந்து வேணும்.’ சொல்லிக்கொண்டே வாயிற்கதவைத் திறந்து உள்ளே நுழைந்தான் முத்து.

வீட்டாரு இன்னும் எப்ப வருவாப்லனு தெரியலயே.’ வீட்டிற்குள் நுழைந்துக் கொண்டே சொன்னான்.

இந்த வீட்டிற்கு ஒப்பந்தப்பட்ட பெயிண்டிங் வேலையை இன்னும் அவன் முடிக்கவில்லை. வீட்டிற்குள் பல வண்ண பெயிண்டுகளில் சிறிது சிவப்பும் மஞ்சளும் முன்னமாக தெரிந்தன. இப்போதெல்லாம் அந்த வண்ணங்களைப் பார்த்தால் அவனுக்கு கண்கள் பார்வைக்கு விலக மறுத்து அதையே பார்க்கின்றன. அதைப் பார்க்கும் போதெல்லாம் அவள் எரித்து புதைக்கப்பட்டதையே பலமுறைக் கடந்து மீண்டும் நினைவுப்படுத்தியது அவனுக்கு.

தையல் போட்டிருந்த தன் கையைத் தொட்டுப்பார்த்தான் அவன். நன்றாகத்தான் வலித்தது. ஆனால் அது ஒன்றும் அவனுக்கு பெரிய வலியல்ல. இதைவிட பெரிய வலியை அவன் மனதுக்குள் அனுபவித்துக் கொண்டிருக்கிறான். அதை ஏனோ தாங்க முடியாமல் தவிக்கிறான். கேட்ட பொழுது முதல் இந்த ராப்பொழுதுவரை அவனைக் குழப்பி குடைந்து புண்ணாக்கி பாடாய்படுத்தும் ஒரே வலி அதுதான். அதற்கு மருந்தை இங்கே தேடிக் கொண்டிருந்தான். இன்னும் கிடைக்கவில்லை.

முன்பெல்லாம் மஞ்சள் சிவப்பைக் கண்டால் அவனுக்கு ஞாபகம் வருவதெல்லாம் தன் நண்பர்களுடன் சேர்ந்து மகிழ்வோடு உழைத்த தருணங்கள்தான். ஆனால் இப்போதெல்லாம் அவளை எரித்து புதைக்கப்பட்டது தான் மனதில் தோன்றியது.

ஒருநாள் வேலய்யனோடு பேசுகையில் அதைக் கேட்டான். அதை மனம் ஒப்ப முடியவில்லை. ஒப்பா மனதுடன் பலநாள் இருந்துவிட்டான். ’அடடா.. அப்படியா...’ என்று கேட்டுவிட்டு சகஜமாகக் கடந்துபோகும் மனிதர்களைப்போல அவனால் போக முடியவில்லை. அதை மறக்க அவனது மனம் மறுத்துவிட்டது. அதைப்பற்றியே நினைத்துக் கொண்டிருந்தது. அது அவனை நிம்மதியாக இருக்க விடவில்லை. நிலைக்கொள்ளா மனதுடன் அவன் தவித்துக்கொண்டிருந்தான். அல்லாடும் மனதினுள் அடிக்கடி தோன்றும் அந்தக் கேள்விகள் வேள்வி வளர்க்கத் தொடங்கின. கனன்று கொண்டிருக்கும் கேள்விகள்தான் இப்போது அவனை இங்கு கொண்டு வந்து நிறுத்தியிருக்கின்றன.

அழகான வண்ணங்களில் சுவருக்கு பட்டுவிரித்து காண்போர் கண்களை அறைக்கு அறை ஜாலமாக்கிக் காட்டும் வண்ணப்பூச்சு தொழிலாளி அவன். நாற்பது

வயதிருக்கும். இரண்டு கையாட்களுடன் அவனது தொழில் அமோகமாக நடந்துக் கொண்டிருந்தது. அவனது கைகள் கால்களின் இடுக்கில் என்றும் பட்டி மாவின் ஒட்டல் இருக்கும். அது படிந்து காய்ந்து போயிருக்கும். பார்ப்பவர்களுக்கு இவன் என்ன தொழில் செய்கிறான் என்று சொல்லத் தேவையில்லை. ஏனெனில் அவனது நக இடுக்குகளோடு சேர்ந்து அவனது பெயரும்கூட பட்டி பெயிண்டர் முத்து என்றே அடையாளப்பட்டிருந்தது.

அவனுக்கு முத்துலக்கையன் என்ற அரிதான முழு பெயர் வேறு யாருக்கும் தெரியாது. நினைத்திருந்தால் ஆரம்பத்திலிருந்தே கையாட்களிடம் வேலையை ஒப்படைத்துவிட்டு முதலாளி போர்வையில் இருந்திருக்கலாம். ஆனால் அவனிடம் மற்றவருக்கெல்லாம் பிடித்ததே, நடக்கும் வேலையில் தானும் சக உழைப்பாளியாக உழைத்து நிற்பான். ஏனெனில் உழைப்பைக் குறித்த அவனது பார்வையே வேறு. ரொக்கத்தையன்றி உழைப்பை மட்டுமே நம்பிருக்கும் மனிதன்.

அந்த வீட்டிற்கு ஒப்பந்தம் செய்த வேலையைச் செய்ய கையாட்களுடன் செய்து கொண்டிருந்தான். அழகான சிறிய மாளிகைப் போன்ற அடுக்குமாடி வீடு. வெள்ளை நிறத்தாலான கிரீடம் போன்று முன்புறமும் உட்பக்கம் வாலாகவும் நீண்டிருந்தது. அதற்கு பின்னால் உயரமான நான்கு மரங்கள் தூண்கள்போல நிற்க அழகான சிறியதொரு தோட்டம். அங்கே இருக்கிறது அந்த சிறிய வாழைமரத் தொகுப்பு.

வீட்டில் வேலை செய்ய மூன்றுபேர். அதில் வீட்டுக்காரர் தன் மனைவியுடன் அங்கு வசித்து வருகிறார் என்பதை அவன் பார்த்தவுடன் தெரிந்துக் கொண்டான். எப்படியும் ஒருமாதம் வேலை. அங்கு வேலை செய்கிறபோது சில விசயங்களைக் கண்டான் முத்து. வேலையாட்களை அவ்வீட்டார் மரியாதையுடன் நடத்தினர். அவர்களுக்கும் வீட்டுக்காரர்கள் மேல் மதிப்பு அதிகமாக இருந்தது. அவர்கள் சமைத்தார்கள். உணவு பரிமாறினார்கள்.

அந்த வீட்டில் வேலை நடக்கின்றதால் சில நாட்கள் வீட்டுக்காரரும் அவளது மனைவியும் வெளியில் தங்கியிருந்தனர். அவ்வபோது வந்து வீட்டு வேலைகளை கண்காணித்துவிட்டு சென்றனர். எப்போது எந்தப் பொருள் வேண்டும் என்றாலும் சொன்னால் போதும், அதை உடனே ஏற்பாடு செய்தனர்.

அவர்கள் வேலையாட்களிடம் மரியாதையுடன் பேசுவதைக் கண்டு இவர்களைப் பற்றி பெருமையாக எண்ணினான் முத்து. அவர்களை மனதுக்குள்ளும் மரியாதையாக நினைத்துக் கொண்டான். அந்த வீட்டின் சூழலே அவனுக்கு நல்லதாகப்பட்டது. அவன் வேலையாட்களை மதித்தான். ஏனெனில் பாகுபடுத்திப் பார்க்கும் மனப்போக்கு இல்லாதவன் அவன். அவனைச் சுற்றி வாழும் நபர்களும் அப்படித்தான். இந்த சமூகத்தின் பாகுபாட்டு மனப்போக்கின் சாயல் படியாத மனிதனவன். ஆனால்

இவனுக்கும் அந்த சாயலின் வீரியம் தெரிந்த காலம் ஒன்று நேர்ந்தது.

அன்று பட்டி வேலை செய்துக்கொண்டிருந்தவர்கள் மத்தியில் ஒரு பேச்சு அடிப்பட்டது. அது சுவற்றில் மாட்டப்பட்டிருக்கும் படங்களின் வரிசையில் சிலவை இல்லாததால் தெரிகின்ற படிமங்கள் பற்றியதாய் இருந்தது. வேலை ஆரம்பித்த நாட்கள் முதல் ஒரு அறைக்கு இரண்டு மூன்று படங்கள் இருந்த இடங்களில் இப்போது வெறும் சுவரும் படங்களின் சட்டத்திற்கு ஏற்ப ஏற்பட்ட வண்ணப் படிமங்களும் இருந்தன. இதைப்பற்றி முத்துவுடன் பேசிய பணியாளர்கள் இப்படிதான் பேசினார்கள்.

'அதென்னவோ போப்பா. ரூமுக்கு ரூம் ரெண்டு போட்டோவ காணல. போட்டோ இருந்த இடந்தான் அடிச்ச சுண்ணாம்ப அப்படியே காட்டிகிட்டு இருக்கு. மத்த இடமெல்லாம் வெளுத்து போச்சு.' சுவரை சுரண்டிக்கொண்டிருக்கும் ஒருவர் சொன்னார்.

'அவ்ளோ போட்டோங்க இருக்கா.? முத்து கேட்டான்.

'அதெல்லாம்.!' அழுத்தமாகச் சொன்னார். 'வீட்டுக்காரர் போட்டோ வீட்டுக்காரம்மா போட்டோ. இதுதான் இந்த வீடு முழுக்க இருக்குது. காலியான இடத்துல இருந்த போட்டோலாம் எங்கனு தெரியல.'

'தெரியலயா..?' முத்து கேட்டான்.

'ஆமா முத்து வந்ததுலிருந்து பாக்குறனே. ஒரு சில போட்டோங்க இல்ல. வீட்டுக்காரங்க போட்டோதான் இருக்கு.''

'வேலக்காரங்க எடுத்தேது வச்சிருக்காங்களானு ஒரு வாத்த கேட்டுப்பாத்துருவோம். ஏதும் தவறிடப்போவுது. சுவருடன் நல்லுறவாடிக் கொண்டே சொன்னான்.

கேட்டு பாரு முத்தே.!' சொன்னார் ஒருவர்.

பேசிக்கொண்டே பணியில் மீண்டும் மும்முரப்பட்டனர்.

அன்று மதியம் உணவு அவர்களுக்கு வீட்டு சமையல்காரர் வேலய்யனால் பரிமாறப்பட்டது. அப்போது காலியாக இருக்கும் இடங்களிலிருந்த படங்களைப் பற்றி விசாரித்தனர்.

'வேலண்ணா, அந்தந்த ரூம்ல ஒன்னு ரெண்டு போட்டோங்க இருந்த இடமெல்லாம் காலியா இருக்கே.? எடுத்தேது வச்சிருக்கிங்களா..?' முத்து கேட்டான்.

'போட்டாங்களா.?' அதிர்ச்சியானார் சமையல்காரர் வேலய்யன்.

‘ஆமாண்ணா.’ முத்து வெகு இயல்பாய் சொன்னான்.

‘அது.. அது.. அதெல்லாம் இங்க இல்லயே, இல்லயே.’

‘அப்படியா? சரி சரி.’

‘பெயிண்டரே, படம் இல்லாதது உங்களுக்கு எப்படி தெரியும்.? எப்படி தெரியும்.? வேலய்யன் இரண்டு இரண்டுமுறை பதறலாக பேசுவதை அப்போதுதான் கண்ணுற்றான் முத்து. பதிலுக்கான முனைப்பில் வேலய்யனின் பதற்றம் முத்துவின் கவனத்திலிருந்து பின்தள்ளப்பட்டது.’

‘இதுல என்னண்ணா இருக்கு. செவுத்த எல்லாரும் தள்ளி நின்னே பாக்குறவங்க. ஏன்னா சுண்ணாம்பு ஒட்டிக்குமாம். நாங்க பக்கத்துலயே நின்னு பாக்குறவங்க. செவுரே எங்ககிட்ட சொல்லிறும். என்னவெல்லாம் மாட்டியிருந்துச்சி அதெல்லாம் இருக்கா இல்லையானு. சின்ன புள்ளைங்க போல, ஒவ்வொரு செவுரும் ஒவ்வொரு மாதிரி. அதுக்கு ஏத்த மருந்த போட நாங்க ரெடி பண்ணுவோம்.’

‘அது சரி.!’ சோற்றை வைத்துவிட்டு சென்றார் வேலய்யன்.

அதற்கு மேல் படங்களைப் பற்றி யாரும் எதுவும் பேசவில்லை.

வீட்டு வேலைகள் அங்கு மடமடவென நடந்தன. ஒவ்வொரு அறையாக வேலையை முடித்துக்கொண்டு வந்தனர் முத்துவின் ஆட்கள். புதிய வண்ணம் தீட்டிய அறைகளில் பொருட்களை வைத்து இடம் மாற்றிக் கொண்டனர். அந்தந்த அறையிலிருந்த பொருட்களை அந்தந்த அறைக்குள்ளேயே சரியாக வைத்தனர். படங்களை சுவற்றில் சரியாக அணிவித்தனர். பெரும்பாலான வேலைகள் முடிந்த நிலை. ஒருநாள் அது நடந்தது.

படங்கள் மாட்டப்படாமல் சுவற்றில் மீதமிருக்கும் ஆணிகள் ஏதோ சொல்ல முற்பட்டன. ஆனால் முத்துவால்தான் அதை அப்போது புரிந்துக்கொள்ள முடியவில்லை.

அன்று வேலை பாதி நாளுக்கு மேல் முடிந்திருந்தது. முத்துவின் வேலையாட்கள் இருவரும் விடுப்பு கேட்டு சென்றுவிட்டப்பிறகு, மாலை நேரம் நெருங்கும் முன்பு சாப்பிடுவதற்காக வேலையை நிறுத்திவிட்டு வந்தான் முத்து. வேலய்யன் உணவை எடுத்து வைத்திருந்தார்.

‘வேலண்ணா .. பாருங்க இன்னிக்கு நான் தனியா சாப்பிடப் போறேன்.’ சொல்லிக்

கொண்டான்.

'மத்த ரெண்டு பேரும்.?' வேலய்யன் கேட்டார்.
'ஒரு வேலையா ரெண்டு பேரும் போயிட்டாங்க. சரினு நான் மட்டும் செஞ்சிக்கிட்டிருக்கேன்.'
'அவங்களுக்கும் சேத்து சாப்டுக்களாம் விடுப்பா.'
'எங்கண்ணா தட்டு.?'
'அடச்சே.! மன்னிச்சிரு முத்து. தட்டெல்லாம் கழுவ போட்டது அப்படியே விட்டுட்டேன். கொஞ்சம் பொறு. எடுத்துக்கிட்டு வந்துடறேன்.'

'வேலண்ணா, இருங்க இருங்க. நான் வேற ஏற்பாடு பண்றேன்.'

'எங்கப்பா போற.?'

'கொஞ்சம் இருங்க வர்றேன்.' சொல்லிவிட்டு வேகமாக நகர்ந்தான் முத்து.

ஒரு கொடுவாளை தேடி எடுத்துக்கொண்டு பின்பக்கமுள்ள தோட்டத்திற்கு வந்தான். அங்கிருக்கும் ஒரு ஆளுயர வாழைமரத்தின் தண்டில் வாழைஇலை தன்னிடம் கைகொடுக்க வருவதுபோல நன்றாகத் தெரிந்தது. அவன் கையால் வளைத்துப் பிடிக்க ஏதுவாக அவனது கழுத்துயரத்திற்கு இருந்தது. அதையே வெட்டிக்கொள்ள நினைத்து ஒரு கையில் பிடித்துக்கொண்டு கொடுவாளால் ஓங்கினான்.

ஆற்ற்ற்ற்ற்க்க்க்க்......

வீட்டுக்குள் உணவை எடுத்து வைத்துக் கொண்டிருந்த வேலய்யன் காதில் கத்தல் சத்தம் கேட்டதும் ஆள் பாய்ந்து ஓடினார். வீட்டுக்கு பின்னால் முத்துவின் கையில் பலமான வெட்டு விழுந்திருந்தது. முத்து வலியில் துடித்துக் கொண்டிருக்க, ரத்தம் நிறைய வெளியேறிக் கொண்டிருந்தது. அதைப்பார்த்ததும் ஒரு நொடி திடுக்குற்றார் வேலய்யன். என்னாச்சு என்று கேட்கவும் வாய் வராமல் போனது. சுதாரித்துக் கொண்டு காயத்திற்கு கட்டுவதற்காக சில பொருட்களை எடுத்துக்கொண்டு ஓடி வந்தார்.

'என்னா முத்து நீ..? இப்படி வெட்டிக்கிட்டியேப்பா. காயத்தைக் காட்டு.'

கொண்டு வந்த துணியில் மூன்று துண்டுகளாய் பிரித்தார். ஒரு துணியை மெல்ல மஞ்சளில் நீர் விட்டு தோய்த்து எடுத்துக் கொண்டார். வெட்டுப்பட்ட இடத்தில் ரத்தம் போக விடாமல் முத்து அழுத்தி பிடித்திருந்தான். கையை எடுத்துவிட்டு பார்த்தால் அரை அங்குல ஆழத்திற்கு கொடுவாள் இறங்கியிருந்தது தெரிந்தது. காயத்தின் மேல் மஞ்சள் துணியை மென்மையாக படறவைத்து, இரண்டாம் துணியால் கையில் சுற்றி மூன்றாம் துணியால் கட்டுபோல கட்டிவிட்டான் வேலய்யன். கட்டில் ரத்தம் கசிந்து

மஞ்சள் பத்துடன் சேர்ந்து கலந்த கலவைப்போல தெரிந்ததைக் கண்டதும் உடல் நடுக்குற்றார். வேலய்யனின் நடுக்கத்தை ரத்தம் பார்த்ததால் ஏற்பட்டதென எண்ணிக்கொண்டான் முத்து. அவனது கையில் ரத்தம் படிந்து காயத் தொடங்கியது. வலி உயிரைக் கொண்டுவந்து கையில் நிறுத்தியது. கை முழுவதும் காய்ச்சல் கண்டு கொதித்தது. வலியைத் தாங்க முடியாமல் கையைப் பிடித்துக் கொண்டு முனகினான் முத்து.

தன்னிலை அடைந்த வேலய்யன் முத்துவிடம் அப்போதுதான் கேட்டார்.

'இவ்வளவு ஆழமா வெட்டியிருக்கே முத்து. கொஞ்சம் பாத்து செஞ்சிருக்களாமில்ல. ஒரு மாசம் தின்னு சேர்த்த ரத்தமெல்லாம் இப்படி வீணா போயிடுச்சே.'

'நான் வெட்டலணா.' முத்து வலியில் வார்த்தையை அழுத்திக்கொண்டு கூறினான். இதைக் கேட்டதும் வேலய்யனுக்கு தூக்கி வாரிப்போட்டது.

'நீ வெட்டிக்கலயா.?' முகம் முழுக்க குறித்துப்போய் கேட்டார்.

'நான் வெட்டலணா.!' மீண்டும் சொன்னான் முத்து. வேலய்யனுக்கு நடுக்கம் இன்னுமிருந்தது. முத்து சொல்வதை அவரால் சாதாரணமாக எடுத்துக்கொள்ள முடியவில்லை.

முத்துவின் வெட்டுண்ட கையைப் பார்த்தார். வாழை மரத்தடியில் கிடக்கும் கொடுவாளில் முத்துவின் ரத்தம் இருந்ததைப் பார்த்தார். வாழை மரத்தில் எந்த இலையும் வெட்டப்படாமலிருந்ததைப் பார்த்தார். அவருக்கு புரிந்தது. வேகமாக திரும்பி வலியில் நெளிந்துக் கொண்டிருக்கும் முத்துவைப் பார்த்தார்.

'முத்து வா. உடனே ஆஸ்பத்திரிக்கு கெளம்பலாம்.' அழைத்துக் கொண்டு சென்றார் வேலய்யன்.

தொடரும் ...

– கார்த்தி டாவின்சி

# பெண்களின் சக்தி

பட்டாம் பூச்சிகள் போல் சிறகடித்துப் பறக்கும் பெண் குழந்தைகள். ஆண், பெண் இருவருக்கும் உடல் சக்தி, மனோசக்தி ஒரே அளவு தான். ஆனால் பெண் குழந்தைகள் அந்த சக்தியை ஒவ்வொரு தருணத்திலும் கொஞ்சம் கொஞ்சமாக இழக்கிறார்கள். முதல் முறையாக பூப்படையும் போது தான் பெண்மை என்ற எண்ணம் அவளுக்குள் பூக்கிறது. அப்போது தான் அடக்கம், பெண்மை, அச்சம், பயம், வெக்கம் இவைகள் இயற்கையாகவே யாரும் சொல்லாமலே வந்து விடுகிறது. பின் உடல் பருவ மாற்றங்கள் வரும்போது வீட்டிலும் பள்ளி கல்லூரிகள் செல்லும்போதும் சில தடைகளை சந்திக்க வேண்டி உள்ளது.

இரண்டாவதாக திருமணம் ஆன பின் ஏற்படும் தடைகள் படிப்பு, தனி திறமை, சுதந்திரம், பெற்றோர்கள், நண்பர்கள், சகோதர சகோதரிகள், பிறந்த ஊர் என பல அற்புதமான விஷயத்தை விட்டு விட்டு அந்த மனநிலையே மிகப்பெரிய தடை. குழந்தை பிறந்த பின் உடல் ரீதியாகவும், மனா ரீதியாகவும் பலவீனம் அடைந்து தடைகளின் உட்சதையும் அடைகிறாள். பிள்ளைகள் வளர்ந்து அவர்கள் தன்னிலை அடையும்போதும் ஒரு பெண் மனநிறைவு அடைவதில்லை.

முதுமை வந்துவிட்டது இனி யார் நம்மை பார்த்துக்கொள்வார்கள்? என்ற பயம் மீதி வாழ்க்கையை வாழவே தடையாக இருக்கிறது. ஒரு பெண்ணுக்கு சரியான பெற்றோர்கள் தேவை. நல்ல தோழிகள் தேவை. நல்ல கணவன் தேவை. இம்மூன்றும் சரியான தருணத்தில் சரியானவர்களாக அமைந்து விட்டால் இந்த தடைகளில் சிக்காமல் இந்த மண்ணில் பிறந்த தேவதைகளாக வாழலாம். நன்றி.

- ஆசிரியை கற்பகம்





- மன்னை ரஞ்சித்

# ஆத்தா என்னும் அபூர்வம்

தேகம் சுருங்கிபோன தேவதை அவள்....

அவள் சொல்லி வளர்த்த கதையெல்லாம் கதாபாத்திரமாக எங்கோ வாழ்ந்துக் கொண்டுதான் இருக்கும்....

திருவிழா வந்தால் அவள் முந்தானையில முடிச்சுருந்த காசெல்லாம் பொம்மையா வீட்டுல இருக்கும்....

அவள் செய்து வச்ச பலகாரமெல்லாம் பல நாள் அவளின் கைருசி சொல்லும், ஆனா சில நாள்லயே தீர்ந்து விடும்...

குழந்தையாக இருந்தப்ப கண்ணுல பட்டதெல்லாம் கேட்டுருப்போம்
முகம் சுழிக்காம வாங்கிகொடுப்பா....
ஆசைப்படுத்தும் பாடு...

இப்ப குழந்தை போல அவள் ஆசையாக கேட்டும் இனிப்பு பண்டமெல்லாம் வாங்கி கொடுக்க முடியாத நிலையில்ல இருக்கோம் சக்கரை நோயோ அவளுக்கு வந்த கேடு....

பெத்த வயிறு கூட எங்களுக்கு காய்ச்சல் வந்தாதான் துடித்துப்போகும்

ஆனா அவ பெத்தவ பெத்ததுங்கள நினைச்சு நாள்தோறும் துடிக்கும் அவ மனசு...

சின்ன வயசுல நினைச்சதெல்லாம் கிடைக்கலைனாலும்
நாங்க நினைக்காம கிடைச்ச எங்க சாமி ஆத்தா

பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள்
பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்

# திறவுகோல்

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த கட்டுரைகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் கொண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

---

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

---

மன்னார்குடி படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம் பெற செய்ய
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

---

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைப்பேசிக்கே மின்னிதழை பெற
பகிரி: +91 8220567322

---

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய
http://maintharkal.mannai.in

---

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

கி. மாணிக்கம்
திறவுகோல் ஆசிரியர் குழு

## 2015ம் ஆண்டு முதல்
## மன்னையின் மைந்தர்கள் குழுவின் பணிகள் ....

காவிரி, உரிமை மீட்பு குழுவின் பனங்குடி, இந்திய அரசின் பெட்ரோலிய ஆலை முற்றுகை போராட்டத்தில் மன்னையின் மைந்தர்கள் பிற போராட்ட குழுவுடன்

சீமை கருவேல மரம் அழிப்பு மன்னை தொடர்வண்டி நிலையம் அருகில்

இரத்த தான முகாம்

கடலூர் வெள்ள நிவாரண பணிகள்

பூமியை காப்போம் கருத்தரங்கம் (தேசிய மேல்நிலைப் பள்ளி - மன்னார்குடி)

நம்மாழ்வார் பூங்கா அமைத்தல் (தொடர் வண்டி நிலையம் அருகில் )

நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு

தோழர் கு. முத்துகுமார் 7ம் ஆண்டு நினைவு நாள்

உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்கள் பங்குபெற்ற நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம்

தொடர்வண்டி நிலைய கருவேல மரம் அகற்றல் மற்றும் சமநிலைப்படுத்துதல்

உலக சுற்றுசூழல் தின அன்று தொடர்வண்டி நிலையத்தில் இருக்கும் கருவை மரங்களை அகற்றும் பணி நடைபெற்றது

ஜி. ஆர். தோப்பு சீமை கருவேல மரங்கள் அழிப்பு

மாணாக்கர்களுக்கு கையேடு, எழுதுகோல் வழங்கிய மன்னையின் மைந்தர்கள் குழு

<u>நம்மாழ்வார் ஏரியில் நடைபெற்ற பணிகள்</u>
சீமை கருவேல மரங்கள் அழிப்பிற்கு பின் தூர்வாரி மீட்டெடுத்தல்
பழைய சுவர்களில் வெள்ளையடித்தல்
நிலத்தடி நீர் அதிகரிக்க வேண்டி செய்த பணி
குழாய் பதிக்கும் பணி
விதை விதைப்பு, மரக்கன்றுகள் நடப்பு

திறவுகோல் மின்னிதழ் வெளியீடு

மண்ணின் மாற்றத்தை நோக்கி

## எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்

**+91 8220567322**

http://maintharkal.mannai.in

MannaiyinMaintharkal Thiravukolmagazine